# சாளரம்

பெப்ரவரி 1992 விலை 12 ரூபா



ஓவியம் - லங்கா

இளையோர் திங்கள் இதழ்

## ஓவியவாக்கியம் பதில்

இளவயதுக் கனவுகளைக் களைந்து விட்டு
களமதனை நாடுகின்ற இளையோர் கூட்டம்
எதிரிப்படை விரட்டிடவே கண்விழித்து
எல்லைதனில் எப்போதும் காவல் செய்ய - இங்கு
வேலிக்காய் சண்டையிடும் முதியோர் செய்கை - வெறும்
கேலிக்கே இடமன்றோ ! போலியான
கௌரவங்கள் கொண்டிருப்பர் இவர்களெல்லாம்
வீணான வெறும் வெற்றுச்சடங்கள் காணீர்.

'நிதர்சனா'
அல்லிப்பளை,
சி. சி. த. க பாடசாலை,
பளை.

## யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும்

*விபுலானந்தர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 'யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும்' என்ற தலைப்பிலான நூல் ஒன்று சாளரம் வெளியீடாக வரவுள்ளது. நூல் குறிப்பிட்டளவே வெளியாகும். தேவைப்படுவோர் முன்கூட்டியே சாளரத்துடன் தொடர்பு கொள்ளவும்.*

## பகலவன் பதில்கள்

அடுத்த இதழில் இருந்து வெளிவரும்.

## சிறுகதை எழுதிவிட்டீர்களா?

*சமகால நிகழ்வுகளை மையமாகக் கொண்ட சிறு கதைப்போட்டியொன்றினை 'சாளரம்' நடாத்தவுள்ளது பற்றி கடந்த இதழில் அறிவித்திருந்தோம். 25-03-1992 இற்கு முதல் கிடைக்கக்கூடியதாக சிறுகதைகளை அனுப்பிவையுங்கள்.*

*தாளில் ஐந்து பக்கங்களிற்கு மேற்படாமல் எழுதுங்கள். ஒரு தாளின் ஒருபக்கம் மட்டுமே எழுதப்படவேண்டும் என்பதையும் கவனத்தில் எடுங்கள்.*

*முதலாம் பரிசு 500 ரூபா*
*இரண்டாம்பரிசு 300 ரூபா*
*மூன்றாம் பரிசு 200 ரூபா*

*பரிசுபெற்ற கதைகளுடன் நல்லகதைகளாக தேர்ந்தெடுக்கப்படுபவை சாளரத்தில்' பிரசுரமாகும்.*

'சாளரம்' வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

## உள்ளே...


- ☐ மாணவரின் வளர்ச்சி கூட்டு முயற்சியிலேயே தங்கியுள்ளது
- ☐ சரணடைவா சுதந்திரமா?
- ☐ அறிவியல் என்றால் என்ன?
- ☐ அரும்புகள்
- ☐ குறுக்கெழுத்துப் போட்டி
- ☐ செய்திப் பதிவுகள்
- ☐ கலை இலக்கியத்தில் இன்றைய எதிர்பார்ப்பு
- ☐ பால்டிக் நாடுகளில் சுதந்திரப் பிரகடனம்
- ☐ குழந்தை இன்னும் பேசவில்லையா
- ☐ வேலிகளை விட்டு வெளியே
- ☐ தமிழ் மாணவர் பிரச்சினையும் சிங்களப் பேரினவாதமும்
- ☐ நிலாமுற்றம்
- ☐ ஒரு தலைமைப் பேருரை
- ☐ வவுனியா மாவட்டத்தின் இன்றைய கல்வி நிலை
- ☐ ஆசிரியர் தலையங்கம்
- ☐ மனநிலையும் செயன்முறையும்

# மாணவரின் வளர்ச்சி: கூட்டு முயற்சியிலேயே தங்கியுள்ளது

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் அதிபர் வண. பிதா மைக்கல் ஜோசப் அடிகளார் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக கல்விப்பணியில் ஈடுபட்டு வருகிறார். சாளரத்திற்காக அவரை செவ்வி கண்டோம். எமது சில கேள்விகளுக்கு அவர் சொன்ன பதில்கள் இங்கே தரப்பட்டுள்ளன.

***● நாட்டுப்பற்று சமுகப்பற்று என்பன இன்றைய மாணவ சமுதாயத்திடம் மிகக் குறைவாகக் காணப்படுவதற்கான காரணங்கள் என்னவென்று நினைக்கிறீர்கள்?***

இதற்கு முதலாவது காரணமானவர்கள் பெற்றோர் என்றுதான் நான்சொல்வேன். தமது பிள்ளைகள் எந்தத் துறையில் கற்க வேண்டும் என்பதைக்கூட பெற்றோர்தான் தீர்மானிக்கின்றனர். பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று பாடத் திட்டத்திற்குட்பட்ட விடயங்களை மட்டுமே பயில வேண்டும். அதிக புள்ளிகள் எடுக்க வேண்டும். பரீட்சையில் சித்திபெற வேண்டும் என்பன மட்டுமே பெற்றோரின் நோக்கமாகவுள்ளன.

***● பொறுப்புள்ள ஆசிரியசமுகம் இதனைச் சிந்திக்கலாம் அல்லவா? பாடசதிட்டத்திற்குள் மட்டும் மாணவர்சளை முடககிவிடாது சமுகப்பணிகளில் அவர்களை ஈடுபடுத்தி நாட்டிற்குத் தேவையான சமுகப் பொறுப்புள்ள பிரஜைகளாக்க முயலலாம அல்லவா?***

ஆம், இதற்கு சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் முன்மாதிரியானவர்களாக இருக்க வேண்டும். மாணவர்களை சமூகப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கு முன்னர் ஆசிரியர்கள் அதில்ஈடுபட வேண்டும். இதன் மூலமே மாணவர்களுக்கு ஓர் வழிகாட்டியாகலாம். ஆனால் அவர்களும் தங்களுக்குரிய பாடத்திட்டத்துள்ளேயே நின்றுவிடுகிறார்கள். இதற்கு நாமும் ஓர் காரணமாகிறோம். ஓர் ஆசிரியர் சமூகப் பொறுப்புள்ள மாணவர்கள் எத்தனைபேரை உருவாக்கியுள்ளார் என எவரும் பார்ப்பதில்லை. அந்த ஆசிரியர் தான் கற்பிக்கும் பாடத்தை எவ்வளவு தூரம் கற்பித்திருக்கிறார். அவரது பாடத்தில் மாணவன் எவ்வளவு புள்ளிகளை எடுத்திருக்கிறான் என்றே பார்க்கிறோம். இதை அவதானித்தே அந்த ஆசிரியரும் மதிக்கப்படுகிறார் இவ்வாறானதோர் பிழையான சமூகப்பார்வையும் இதற்கோர் காரணமாகிறது. ஒரு மாணவனை நல்ல முறையில் வளர்த்தெடுப்பது என்பது தனியே ஓர் ஆசிரியரின் பணிமட்டுமில்லை. பெற்றோர் – ஆசிரியரின் கூட்டு முயற்சியினாலேயே இது சாத்தியபடும்.

***● தற்போதுள்ள கல்விமுறையில் உள்ள குறைபாடுகள் பற்றி என்னநினைக்கிறீர்கள்?***

மாணவர்களிடம் பல விதமான திறமைகள் உண்டு. அவற்றை வளர்த்தெடுக்கக் கூடியதாக கல்வி அமைப்பு இருக்கவேண்டும். தொழில் நுட்ப பாடங்களுக்கு அதிக முக்கியத்துவமளிக்கப்பட வேண்டும். திட்டவட்டமாக ஆராய்ந்தளிக்கப்பட்ட கல்வித்திட்டமாக இது இல்லை. ஒவ்வொரு அரசாங்கமும் மாறும் போது கல்வித்திட்டமும் மாற்றமடைகிறது. அரசியல் வாதிகளே தமக்கேற்றவாறு கல்வித் திட்டங்களை அமைக்கிறார்கள் இக் கல்வி முறைக்கு மேலாக மாணவர்களை சிந்திக்கச் செய்தல் மிகவும் அவசியம். மாணவர்களின் மனங்களை மாற்றக் கூடியவாறு சில திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். வீடியோ படங்கள் மூலமாகக்கூட சிலவற்றைச் செய்யமுடியும். இதனை சில பொது ஸ்தாபனங்கள் முன்வந்து செய்ய முயற்சிகள் எடுத்தால் நன்று.

***● முப்பது வருடங்களுக்கு மேல் கல்விப் பணியில் ஈடுபட்டு வருகிறீர்கள். அக்காலத்து ஆசிரியர்களுக்கும் இக்காலத்து ஆசிரியர்களுக்குமிடையே உள்ள வேறுபாடு என்ன எனச் சொலல முடியுமா?***

அந்தக்காலத்து ஆசிரியர்களிடம் அர்ப்பணிப்புத் தன்மை அதிகம் காணப்பட்டது. இப்

கல்வியாளர் பக்கம்

போது அர்ப்பணம் என்பது சரியாக உணரப்படவில்லை. உதாரணத்திற்கு கிராமப் புறங்களில் சென்று கல்வி புகட்டும் ஒருசில ஆசிரியர்கள் பிழையான முறைகளில் நடந்து கொள்கிறார்கள். அக் காலங்களில் கிராமங்களில் சென்று கற்பித்த ஆசிரியர்கள் அங்குள்ள மாணவர்களை மட்டும் உருவாக்கவில்லை. ஒரு நல்ல கிராமத்தையே உருவாக்கி இருக்கிறார்கள். இக் காலகட்டத்தில் வாழ்விற்கான பொருளாதாரம் ஒரு பெரும் சுமையாக இருப்பதால் இக்கால ஆசிரியர்கள் ஓர் இயந்திரமாக - பொருள் சேர்க்கும் தொழிலாளியாக இயங்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். என்பதையும் இங்கு சொல்லவேண்டியுள்ளது.

● *தனியார் கல்வி நிலையங்களின் அவசியம்பற்றி...*

தனியார் கல்வி நிலையங்கள் 'சேவை' என்பதை விட 'வியாபாரம்' என்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன என்றுதான் நான் கூறுவேன். பெற்றோரும் மாணவர்களும் தங்கள் கல்வி வளர்ச்சிக்காக முன்பு பாடசாலைகளையே நம்பி இருந்தனர். தனியார் கல்வி நிலையங்கள் வந்த பின்பு பாடசாலைகள் இரண்டாம் இடத்திற்கு வந்துவிட்டன. இதனால் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியரின் கௌரவமும் சமூகப் பார்வையில் குறைகிறது. அத்துடன் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவர்கள் ஒரு விதமான 'பொழுதுபோக்கு' எண்ணங்களுடனும் அங்கு செல்கின்றனர். மாணவர்களுக்குரிய சில கட்டுப்பாடுகளை மீறிப் பார்க்கவும் அங்கு வழிகிடைக்கிறது. பாடசாலைகளில் புத்தகங்களை மட்டுமல்லாது ஒழுக்கக் கட்டுப்பாடுகளையும் மாணவர்கள் பயிலமுடிகிறது. வகுப்பறையில் ஆசிரியர்கள் இல்லாத நேரங்களில் கூட இவற்றை மாணவர்கள் கற்றுக்கொள்ள முடிகிறது.

● *மாணவர்கள் நாட்டு, சமூகப்பற்று மிக்கவர்களாக உருவாக அடிப்படையில் என்ன செய்யலாம்?*

அடிப்படையில் பெற்றோர் மனங்களை மாற்றவேண்டும். அத்துடன் ஆசிரியர்கள் தமது பணியின் முக்கியத்துவத்தினை உணர்ந்து செயல்பட வேண்டும். ஆசிரியர்களாக நியமிக்கப்படுவோரின் வெறும் கல்வித்தகமைகள் மட்டும் பார்க்கப்படாது சமூக ஒழுக்கம் மிக்கவர்களா என்பதையும் ஆராய்ந்து நியமனம் வழங்கப்பட வேண்டும். இன்றையமாணவர்கள் நெறிப்படுத்தப்பட வேண்டியது இன்றியமையாதஒன்று. ஏனெனில் இன்றைய மாணவர்களே நாளைய ஆசிரியர்களாகவும், பெற்றோராகவும் வரப்போகிறார்கள்.

## மூடிய கண்ணும் கோணல் நடையும்

ஒருவரின் கண்ணை மூடிக் கட்டிவிட்டு அவரை நேராக நடக்கச் சொல்லுங்கள். எவ்வளவு முயன்றாலும் அவரால் அதிக தூரம் நேராக நடக்க முடியாது. ஒரு பக்கத்துக்கு வளைந்து நடக்கத் தொடங்கி விடுவார். அவரை அப்படியே நடக்க விட்டால் வளைந்து நடந்து ஒரு வட்டமாகச் சுற்றி வருவார்.

எங்கள் உடல் இரு பக்கமும் சமமான அளவில் அமையாதிருப்பதே இதற்குக் காரணம்.

உடலின் வலது பக்கமும் இடது பக்கமும் ஒரே அளவான பாரத்தைக் கொண்டிருப்பதில்லை. உதாரணமாக இருதயம் இடது பக்கத்திலும் ஈரல் வலது பக்கத்திலும் உள்ளன. இவை ஒரே அளவான பாரமுடையனவல்ல. எங்கள் எலும்புக்கூடும் இரு பக்கமும் சம அளவான பாரத்தைக் கொண்டிருக்கவில்லை. கை, கால் முதலியவற்றின் பாரம் இடது பக்கத்திலும் பார்க்க வலது பக்கம் சிறிதளவு கூடியது.

கண்கள் மூடிய நிலையில் எங்கள் நடை உடலமைப்பினாலும் தசைநார்களாலுமே நிர்ணயிக்கப்படுகின்றது. உடலின் ஒரு பக்கம் பாரம் கூடியதாக இருப்பதால் நடை இயல்பாகவே அப்பக்கத்துக்கு வளைகின்றது.

கண்கள் திறந்திருக்கும் போது பாதையை எங்களால் பார்க்க முடியும். எனவே, மூளையின் செயற்பாடு காரணமாக நேராக நடக்க முடிகின்றது.

# சரணடைவா சுதந்திரமா?

சிங்கள பௌத்த பேரினவாதிகள் இன்று போர் என்றும், சமாதானம் என்றும் ஏதேதோ கூறி போருக்கே மேலும் தயாராகி வருகிறார்கள்.

பௌத்த மதபீடமும், அரசியல் அணியின் ஒரு பிரிவும் பகிரங்கமாகவே போர் எக்காளமிடுகின்றனர். இலங்கையின் தென் பகுதியிலும் மத்திய பகுதியிலும் உள்ள தமிழ் மக்களுக்கு எதிராக இனவாத வன்செயலைத் தூண்டி விடுவதன் மூலம் போர் வெறியை உக்கிரமடைய வைக்க முயலுகிறார்கள்.

சிறிலங்கா இராணுவம், பாரிய போர் நடவடிக்கைகளுக்கு தன்னை வெளிப்படையாகவே தயார்படுத்தி வருகின்றது. அதேவேளையில் அது சமாதானமும் கூடப் பேசுகின்றது.

சிறிலங்காவின் அரசியல் கட்சிகள் தம்மால் இனியும் இனவாதத்தை இறுகித் தழுவிப் பிடித்துக் கொள்ள முடியாது என்பதை ஓரளவிற்கு புரிந்து கொண்டுள்ளன. பேரினவாதம் சாகும் பொழுது தாமும் கூடச் சாக வேண்டி வரும் என்பது அவர்களால புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இனவாத சிந்தனா முறையும், அதிக வாக்குத் தேடும் ஆசையும் அவர்களின் கண்ணை மறைத்து வருகின்றது. சரியான முடிவெடுக்க முடியாது தடுமாறுகிறார்கள். சமாதானம் என்னும் முகமூடி அணிந்து போர் என்னும் ஆயுதம் ஏந்தி இன சங்காரம் என்னும் களம் புகுகிறார்கள்.

இம் மூவரும் சேர்ந்து இன்று தமது களத்தை மலையகத்துக்கும் விஸ்தரித்து வருகிறார்கள்.

'சமாதானம்' என்ற கோரிக்கையையும், அது அண்மித்து விட்டதாக காட்டப்படும் பாசாங்குகளையும் த. ஈ. வி. புலிகளுக்கு எதிராக தமிழ் மக்களை திசை திருப்பி விடும் ஒரு அரசியல் நெம்புக்கோலாக பயன்படுத்த முயலுகிறார்கள். சிங்கள அரசியல்வாதிகளின் கபடத் தனத்தைக்கூட புரிந்து கொள்ள முடியாதளவிற்கு பௌத்த மதபீடம் முட்டாள்தனமானதாகவுள்ளது.

மலையக மக்களின் தலைவனாக இனங்காணப்படும் திரு தொண்டமான் அமெரிக்க 'சமாதானத் தூதர்'' கீஸிங்கர், பேக்கர் வரிசையில் தானும் ஒரு பிராந்திய சமாதான தூதுவராக வர முற்படுகிறார். அவரின் முயற்சி நன்மையானதே. ஆனால், வரலாறு அவரை அமிழ்த்தி அடக்குகிறது ஏமாற்றப்பட்ட அவர் இன்று ஏங்கிப்போய் இருக்கிறார் போலும்.

இவற்றின் ஒட்டு மொத்த விளைவு, சிறிலங்கா அரசு சமாதானத்திற்கு தயார் இல்லை என்பதும் அது போரைத்தான் விரும்புகிறது என்பதும் இன்று அம்பலமாகியுள்ளது.

தமிழீழ மக்களைப் பொறுத்தவரை அவர்களின் பிரச்சினை போரா சமாதானமா என்பதல்ல. சிறிலங்கா அரசு ஆக்கிரமிப்பை நிறுத்தினால் சமாதானம் தானாக வரும். இதற்காக தமிழீழ மக்கள் எதுவித விசேட நடவடிக்கைகளும் எடுக்க வேண்டியதில்லை. அது சிறிலங்கா அரசைப் பொறுத்தபிரச்சினை தமிழீழ மக்களின் பிரச்சினை சரணடைவா? சுதந்திரமா? என்பது தான்.

சிங்கள பௌத்த பேரினவாதம் மிகச் சிரமப்பட்டு தனது சொந்த குணாம்சத்தை மூடிமறைத்து வருவதன் மூலம், கொழும்பில் இன அமைதி பேணுகிறது. இது சரணடைவை ஊக்குவிக்கும் அதனது தந்திரங்களில் ஒன்றாகும். மூச்சுப் பிடித்துச் செய்யும் இந் நடவடிக்கை நீண்ட நாட்களுக்கு நிலைக்கமாட்டாது.

பொருளாதார தடைவிதிப்பது மற்றோர் சரணடைவுத் தூண்டு நடவடிக்கையாகும் தமிழீழம் விவசாயப் பிரதேசமாகும். தமிழீழ மக்களில் பெரும்பான்மையினர் விவசாயிகளாகும் ஆகவே மனந் துணிந்தால் இத் தடையை உடைத்தெறிவது தமிழீழ மக்களுக்கு ஒன்றும் சிக்கலான நடவடிக்கையல்ல.

சரணடைவை ஊக்குவிக்க இராணுவ தாக்குதலை அதிகரிக்கிறார்கள், சமாதானம் என்ற பெயரில் சரணடைய 'அன்பாக' வேண்டிக் கொள்கிறார்கள்.

தமிழ் மக்களின் பிரச்சினை இன்று சரணடைவா? சுதந்திரமா? என்பது தான். சமாதானமாக சுதந்திரம் கிட்டுமானால் தமிழீழ மக்கள் அதற்கும் தயார். போராடித்தான் சமாதானம் கிட்டுமானால் அவர்கள் அதற்கும் தயார்.

☐ லோகன்

# அறிவியல் என்றால் என்ன?

அறிவியல் என்பது உங்களுக்கு அந்நியமானதல்ல. நீங்கள் கற்கும் ''விஞ்ஞானம்'' அதுதான் அறிவியல் விஞ்ஞானத்தின் தூய தமிழ்ப்பதம். விஞ்ஞானத்தை அறிவியல் எனக் கூற நாம் கற்றுக் கொள்வோம். நாம் பாடத்திட்டத்தில் கற்கும் அறிவியல் எத்துணை எமக்குப் பயன் தருகிறது. தத்துவார்த்த ரீதியான ஐன்ஸ்ரீனின் சார்புத் தத்துவமும் மாக்ஸ் பிளாங்கின் குவாண்டம் (சக்திச் சொட்டு) கொள்கையும் எமது பாடத்திட்டங்களில் புகுந்து எமக்கு எத்துணை பயன் தருகின்றன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஐன்ஸ்ரீனும், மாக்ஸ் பிளாங்கும் எமக்குத் தேவையற்றது என்பது இதன் பொருளில்லை. அறிவியல் கற்பிதத்துள் அதி உயர்நிலைதான் சார்புத் தத்துவமும், குவாண்டம் கொள்கையும் இந்தக் கொள்கைகளை முழுமையாகப் புரிந்து கொண்டால் நமது மூளைகளையே ஆய்வுக் கூடங்களாகக் கொண்டு பேனா முனையால் பரிசோதனை செய்யலாம்.

பரிசோதனை ரீதியில் அறிவியல் வளர்ச்சி காணப்படுமாயின் மட்டுமே இப் பேனா முனைப் பரிசோதனை சாத்தியமாகும். நியூட்டனும், ஐன்ஸ்ரீனும், மாக்ஸ் பிளாங்கும், பெற்ற ஆய்வு கூடத்தில் பரிசோதனை செய்து தமது கொள்கைகளை நிறுவினார்கள் எனக் கேட்கக்கூடும். அவர்கள் பேனா முனையில் கணித அறிவை மட்டும் கொண்டு தரப்பட்ட இக் கொள்கைகள் முழுமையாக நிறுவப்பட்டனவா என்றால், இல்லை என்று தான் கூற வேண்டும் (நியூட்டனைத் தவிர) இவர்களது தத்துவங்கள், தத்துவங்களாக மட்டுமே இப்போதும் அலசப்படுகின்றன. தத்துவங்கள் அறிவின் உச்ச நிலைகளே அறிவு முதிர்ச்சியால் அவை விளங்கப்படவும் விளக்கப்படவும் செய்யும்.

ஆகவே நாங்களும் பரிசோதனை வளர்ச்சியை நமது அறிவியலின் முதற் கட்டமாக எடுத்துக் கொள்வோம். பாடத்திட்டங்களில் உள்ள சூத்திரங்களில் பிரதியிடும் வெறும் மனனத்தனமான அறிவியலை புறக்கணிப்போம். அப்படிப் புறக்கணித்ததால் தான் நியூட்டன் ஈர்ப்பு விசையைக் கணித்தார். அறிவியலில் நாம் செய்ய என்ன இருக்கிறது? எல்லாவற்றையும் தான் முன்னோர்கள் செய்து விட்டார்களே என்று எண்ண வேண்டாம். சிந்தனை தான் அறிவியலின் வளர்ச்சிக்கு அடிப்படை. இப்போது இருக்கும் அறிவியலை மேம்படுத்தவும் அவற்றை உடைக்கவும் அறிவியல் ரீதியான சிந்தனை வழிவகுக்கும்.

இச் சிந்தனையின் விளைவு தான், பற்றி எரியும் உமியை சமைக்கச் செய்யும் அடுப்பிற்கு உபயோகிக்கும் முறை பிறந்தது. உயிர் வாயுவும் பயன் தருகிறது. சிந்தியுங்கள் சிந்தியுங்கள்.

அறிவியல் என்பது ஒரு கடினமான சூத்திரமல்ல. அடிப்படையை விளங்கிக் கொண்டால் எம்மால் எதையும் இயற்ற முடியும் ... அறிவியற் கட்டுரைகளும், நூல்களும் உங்கள் சிந்தனைக்கு வடிகால்களாகும் வாசிப்பும், வாசிப்பின் சிந்தனையுமே ... அறிவியல் வளர்ச்சிக்கு உந்து கோல்கள்...

– கி. அறிவழகன்

## அறிவியல் உண்மைகள்-2

நாம் வீடுகளில் பயன்படுத்தும் மின் குமிழ்கள் இருவகைப்பட்டவை. இன்காண்டஸன்ட் குமிழ்கள் என்னும் சாதாரணவகை.மற்றது புளோரஸண்ட் குழல் எனப்படுவது. இவ்விரு மின் குமிழ்களிலும் ஒளி உண்டாக்கும் அமைப்பு மாறுபட்டதாகும்.

(இன்காண்டஸண்ட்) எனப்படும் சாதாரண மின் குமிழினுள் டங்ஸ்டன் என்ற உலோகத்தினாலான மிக மெல்லிய கம்பி, வெண்மை ஒளி வீசும் அளவுக்கு சூடாக்கப்படுகிறது - அதில் மின் சக்தி பாய்ச்சப்படுவதனால்.

புளோரசண்ட் மின்குமிழ் எனப்படும் குழல் மின் குமிழில் குறைந்த அழுத்தத்தில் பாதரச ஆவி அடைக்கப்பட்டுள்ளது. இந்த ஆவியின் வழியே மின்சாரம் பாய்கிறது. அப்போது அதிலிருந்து கண்ணுக்குத் தெரியாத அல்ட்ரா வயலெட் கதிர்களும், கண்ணுக்குத் தெரியும் ஒளிக்கதிர்களும் வெளிப்படுகின்றன. குழலின் உட்பக்கச் சுவர்களில் பொஸ்பரஸ் பூச்சு தரப்பட்டுள்ளது. அல்ட்ரா வயலட் கதிர்கள் இப் பூச்சின் மீது தாக்கினால் ஒளியை உமிழும்.

இப்படி ஒளி ஏற்பட நேரடி முறையில்லாமல் சுற்றி வளைத்து செயற்படுவதினால், குழல் மின் குமிழ்களில் ஒளி தரச் சற்றுத் தாமதமாகிறது.

சாதாரண பல்புகளை விட குழல் மின்குமிழ்கள் இரு மடங்கு சக்தியும், குளுமையான ஒளியையும் தரக் கூடியவை. □

## தெறிப்பு

விபுலானந்தர் நூற்றாண்டு விழாவுக்கு 1991 மார்ச் மாதத்தில் கால்கோள் விழாவெடுத்ததோடு மட்டும் அமையாது பிராந்திய கல்விப்பணிப் பாளர்கள், சிறீலங்கா கல்வித் திணைக்களம், பல்கலைக்கழகங்கள் யாவற்றிற்கும் விபுலானந்தர் நூற்றாண்டு விழா உயர்ந்த முறையில் கொண்டாடப்பட வேண்டிய தன் அவசியத்தை உணர்த்திய நாம் 'சாளரம்' விபுலானந்தர் நூலை வெளியிடுவது அறிந்து பெரிதுவக்கிறோம். வளர்க சாளரத்தின் பணிகள்.

திரு. க. கனகராசா ஜே. பி.
உரிமையாளர்
மில்க்வைற் சோப் தொழிற்சாலை.

சாளரத்தைப் படித்து பாடசாலை மாணவர்களாகிய நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஜனவரி இதழ் படித்தோம். அறிவியல் உண்மைகள், உழவின் உதயம் யாவும் பயன் உள்ளதாக இருந்தன. 'சாளரம்' தொடர்ந்து வெளிவர வேண்டும் என விரும்புகின்றோம்.

றொ. பி றின்சன்
க. பிரதீபன்
லோ. நந்தன்
வி. அல்பேட்
ப. சதீஸ்
சி. கஜன்
ஆண்டு 11
இந்து மகா வித்தியாலயம்
கொழும்புத்துறை.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-4 பதில்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ச | ம | 7 த | ர் | 10 ம | ம் | X | X | X | X |
| ங் | X | து | ய | னி | 12 இ | ய | ற் | 21 கை | X |
| 2 க | ரி | X | 9 யூ | த | ர் | X | 18 கை | ப் | பு |
| 3 கா | ர் | கோ | ட | ன் | X | 16 த | 19 க | பொ | X |
| ல | X | X | X | X | 13 உ | மி | X | ரு | 22 க |
| ம் | 6 சோ | மோ | றோ | 11 கு | X | ழ் | X | ள் | வி |
| X | க் | X | X | ர | ம் | 17 வா | X | X | X |
| 4 ம | ர | பி | ய | ல் | X | ன் | ரோ | தி | 23 க |
| X | ட் | ப் | X | X | 14 பை | X | 20 அ | லை | ய |
| 5 வ | டி | 8 கா | ல் | X | 15 ச | த் | ய | பா | பா |

ச. உருத்திராசா (ஆண்டு 10)
யா / சம்பர்மலை அ. த. க. பாடசாலை,
வல்வெட்டித்துறை.

தை மாத இதழின் அனைத்து அம்சங்களும் மிகவும் பிரயோசனமுள்ளனவாக இருந்தன. காலத்தின் தேவையுணர்ந்து செயற்படும் "சாளரம்" தொடர்ந்து எமது அறிவுப் பசிக்கு தீனிபோடும் என எதிர்பார்க்கிறோம். இச் சஞ்சிகையில் விஞ்ஞான பூர்வமான கட்டுரைகளைப் பிரசுரித்தால் இன்னும் நன்றாக இருக்கும்.

க. சிவலிங்கம்
உருத்திரபுரம்.

□ □ □

சாளரத்தின் அட்டைப்படம் காலத்திற்கேற்றதாக அமைந்திருந்தது. கதை, கவிதை, கட்டுரை மற்றும், பல்வேறு விடயங்களும் மாணவராகிய எமக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளன. தற்போதைய நெருக்கடியான, போக்குவரத்து சீரின்மையான சூழ்நிலையிலும் சஞ்சிகை உரிய காலத்தில் எமது பாடசாலைக்கு வந்து சேர்கிறது. இதையிட்டு மகிழ்ச்சி. தொடர்ந்தும் இவ்வாறே வர வேண்டுமென வேண்டிக்கொள்கிறேன்.

செல்வி. அ. வினோதினி
ஆண்டு 11
மகளிர் மகா வித்தியாலயம்
சாவகச்சேரி

□ □ □

நான் சாளரத்திற்கென சில ஆக்கங்கள் எழுதி வைத்திருக்கிறேன். அனுப்புவதற்கு தயக்கமாகவுள்ளது. அனுப்பினால் அவற்றைத் திருத்தியமைத்து பிரசுரிப்பீர்களா?

– மு. வனிதா
இந்து மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்

ஆக்கங்களை அனுப்பி வையுங்கள் திருத்திப் பிரசுரிக்கக்கூடியவையானால் அவ்வாறே செய்வோம். உங்களைப்போன்ற பல மாணவர்களுக்கு இப்படியான தயக்கம் இருப்பதாக அறிகிறோம். இதனை நீக்குமுகமாக கதை, கவிதை, கட்டுரை போன்றவற்றிற்கான பயிற்சிப் பட்டறைகள் நடாத்த சாளரம் தீர்மானித்துள்ளது. அதற்கு முன்னடவடிக்கையாக சாளரம் வாசகர் வட்டங்கள் அமைப்பதில் தற்போது ஈடுபட்டு வருகிறோம்.

# அரும்புகள்

## விழித்திருப்போம்

விழியிருந்தும்
விழிக்க முடியாதிருந்தோம்
அறிவிருந்தும்
சிந்திக்காதிருந்தோம்
எதிர்க்கநினைத்தும்
உடன் அடைக்கப்பட்டோம்
இந்நிலை போக்க
இனியாவது விழிப்போம்
கைகள் விலங்கிடப்படாமலே
கைதிகளானோம்
அடக்கி ஆள்பவனின் பின்னால்
அலைந்து திரிந்தோம்
இந்நிலை போக்கிடவே
எல்லோரும் விழித்திருப்போம்.

— இ. ராஜசூரியர்
கந்தர்மடம்

□ □ □ □

## எது பெருமை

மானத்திற்காய் போர் என்றால்
வெறுப்பாம்.
பெருமைக்காய் போர் என்றால்
விருப்பாம்.
மானம் காக்கப் போராடும்
இப்போரின் உணர்வுகள்
ஏன் பெரியோர் சிலருக்கில்லை?

— இ. சகிதன்
யா/ கம்பர்மலை அ. த. க. பாடசாலை

□ □ □ □

## கல்லறை

சிவந்தமண்ணே,
நீ சுமப்பது
உடைந்து போன கல்லறைகள் தான்
இருந்தாலும்.
இதயக்கல்லறையில் இருந்துவரும்
இளைய சுவாசம்
மீண்டும் உன்னைப் பூரணப்படுத்தும்.

செல்வி - கணபதிப்பிள்ளை - நளாயினி
பருத்தித்துறை.

## மாணவன்

இயந்திரத்து உலகமிதில்
இவன் கடமை இயங்குகிறது
இயந்திரமாய் இதயமதில்
பொழுதுகள் கடக்கிறது.
ஈழத்து மாணவரின்
இதயக்கட்டிலில்
இடமின்றி பல தொல்லைகள்
விழித்திருக்க
இவன் கால்கள் நேரக்கம்பிகளுடன்
நீண்டநேரம் போராடும்.

வாசுகி வெற்றிவேல்
வடஇந்து மகளிர் கல்லூரி
பருத்தித்துறை

□ □ □ □

## நல்லாசிரியன்

அன்பின் உரைக்கல்லாய் ஆனவரே
அறிவின் நிறைகுடமானவரே
ஒழுக்கப் பாதையில் எமைவளர்ப்பீர்
உங்கள் மகிமை உரைப்பார் யார்?

வாழ்க்கைப் படகில் கரைசேர
வழியும் வாழ்வும் அருள்வீரே
ஆக்கப்பாதையில் பயிர்வளர்க்கும்
அருவிகள் நீரெம் உயிராவீர்.

துன்பம் தீர்க்கும் மருந்தாவீர்
துணையும் பலமும் நீராவீர
என்றும் நலமே நாம் வாழ
எமக்காய் எரியும் விளக்கானீர்

— க. பேணடெற் கல்பனா
வேம்படிவீதி. யாழ்ப்பாணம்.

□ □ □ □

## சுமைகள்

ஓ... மாணவனே!
உனக்குத்தான் எத்தனை சுமைகள்
பள்ளிப்பாடங்கள் மட்டுமா?
(ரியூசன்) கொப்பிகளும் கூடத்தான்
பாடவரிகளையே
பாடமாக்கிக் கொண்டிருக்கிறாய்
பாரில் நடக்கும் நிகழ்வேதும்
இன்னும் உனக்கு எட்டவில்லை.

— சுகிர்தா இராமசாமி
கொல்லங்கலட்டி.

# குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம் 5

மேல் இருந்து கீழ்

(1) ரிஷிகளும் முனிவர்களும் இவர்களை ஆட்டிப் படைத்தார்கள்.

(5) இதில் 64 வகையுண்டாம்.

(6) இத் தந்திரத்தை எவரும் விரும்பார்.

(7) இக் குழந்தைகள் மௌனக் கொலைக்கு உள்ளாகுகிறார்கள்.

(8) கோவில்களில் இதன்மேல் நடப்பதும் ஒருவகை குளிப்பு.

(9) பெண் குழந்தைகளை இதுபோல் பேணவேண்டும்.

(11) இவ்விதமான தலைமைதான் சாதனைத்திறன் மிக்கது.

(12) நண்பனால் ''ன்'' போடுங்கள் நண்பியானால் ''ள்'' போடுங்கள். சொல் முழுமையாகும்.

(13) அவசியப்படும் போது பொய் பேசுவதுதான் இதுவாம். கீழ் இருந்து மேலாய் நிற்கிறது.

(14) இவர்களின் வரவின் பின் பல பாரம்பரியங்களை புறக்கணித்தே விட்டோம்.

(16) இதில் 'தூங்குபவன்' மதிக்கப்படான். ஓர் எழுத்து தவறிவிட்டது.

(17) சதாம் ஹுசேனின் யமன்.

(18) இது செய்யச் செய்ய குட்டுபவன் மடையன்.

(20) இவ்விதம் உண்டுவாழ்தல் அவமானம். கடைசி எழுத்து தவறிவிட்டது.

(21) ஒளிக்கற்றைகள் இதன் அமைவைப் புரிந்திருக்கவில்லை. இரண்டாவது எழுத்து மெய்யாக உள்ளதை மன்னியுங்கள்.

(23) ஒருவகை சுமைதூக்கிப் பொறி. (கீழ் இருந்து மேலாக நிற்கிறது)

(24) யாருக்கும் எதிராக இதைச் செய்யாதே.

(25) உள்ளத்தால் நரி போன்றவர்களை இப்படியும் அழைப்பார்கள்.

(26) சாமியின் வாகனம்

இடமிருந்து வலம்;

(1) 1991 டிசம்பர் மாதம் ஐ. நா. சபை இதற்காக விசேட தினம் கொண்டாடியது.

(2) புகழ்மிக்க தேரோட்டி குழம்பிப்போய் நிற்கிறான்.

(3) புகழ்பெற்ற மார்கழித் திருநாளும் குழம்பிப் போய் நிற்கிறது.

(4) இதைக் கொண்டு பல்லும் துலக்கலாம், பாரமும் தூக்கலாம்.

(5) கல்லாதவர் முகத்திற்கு இது புண்.

(7) அடிமைத் தனத்தின் அழகான பெயரோ?

(9) 64 கினுள் ஒன்றில் வல்லமை இருந்தாலும் அவனை இவ்விதம் அழைக்கலாம்

(10) நாகரிகத்தின் மூதாதையர்

(12) இன்றைய மாணவ வாழ்க்கை இவ்விதமாய் அமைந்துள்ளதாம்.

(14) இச் சீனப் பாரம்பரியம் இன்று உலகளாவிய நவீனமாய் விட்டது.

(15) நாடுபிடிப்போரை (1 ம் உலகப்போர்) புரட்சிகரப் போராக மாற்றியது யார்?

(19) இதற்குப் பிந்தாதே.

(20) ......... என்றால் சிறைவாசம்''

(22) இதுவும் 1 கீழ் இருந்து மேலுமாக வாழ்வதேகுடும்ப வாழ்க்கைக்கு அழகு.

(25) எந்நேரமும் சாவுக்குதயார் என்பதை எடுத்துக்காட்ட போராளிகள் அணியும் ஓர் வகை ஆயுதம். (வலமிருந்து இடமாக நிற்கிறது.)

(27) வளவு முகப்பில் தொங்கும் எச்சரிக்கைப் பலகையில் இச் சொல் காணப்படும் (வலமிருந்து இடமாகவுள்ளது.)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 8 | 11 | | | | | X | X | | X |
| 2 | | | | X | | X | 17 | X | 21 | | 25 |
| | X | X | | X | 13 | 15 | | | | 23 | |
| 3 | 6 | | | X | X | X | X | X | | X | |
| 4 | | X | | X | 14 | | 18 | | | 24 | |
| | X | 9 | | | | X | ஸி | X | 22 | | X |
| X | 7 | | | X | | 16 | X | 20 | | X | 26 |
| 5 | | X | X | 12 | | | | | X | | 27 |
| | X | 10 | | | | X | 19 | | | X | |

# செய்திப் பதிவுகள்

01-01-92

இலங்கை இனப்பிரச்சினை உட்பட முக்கியமான சகலவிடயங்களும் பௌத்த மகா சங்கத்தின் ஆலோசனைப்படியே கையாளப்படும் என ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா கண்டி மல்வத்தை மகாநாயக்க தேரரிடம் உறுதியளித்தார்.

யாழ். குடாநாட்டில் சாவகச்சேரி, கோப்பாய், சங்கானை ஆகிய இடங்களில் தமிழீழ காவல் நிலையங்கள் திறந்துவைக்கப்பட்டன.

02-01-92

பொது இணக்கம் ஒன்றின் அடிப்படையிலேயே வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுமென்றும், எந்தவொரு தனிநபரோ இராணுவமோ முன்வைக்கும் யோசனைகளை அமுல் நடத்த முடியாது எனவும் ஜனாதிபதி பிரேமதாஸா கண்டி தலதா மாளிகை எண்கோண மண்டபத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

கொக்கட்டிச் சோலையில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரச இராணுவத்திற்குமிடையில் பெரும் மோதல் ஒன்று ஏற்பட்டது. இரு இராணுவத்தினரும் தமிழ்க் குழுவொன்றைச் சேர்ந்த மூவரும் கொல்லப்பட்டனர் இதைத் தொடர்ந்து இப் பகுதிகளைச் சுற்றி விமானத்தாக்குதல்களும் நடந்தன.

07-01-92

அம்பாறை மட்டக்களப்பு மாவட்ட எல்லைப் புறத்தில் சிறீலங்கா இராணுவம் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய திடீர்த் தாக்குதலில் ஒன்பது படையினர் கொல்லப்பட்டனர் பெருந்தொகையான ஆயுதங்கள் புலிகளால் மீட்கப்பட்டன.

10-01-92

காரைநகர் பொன்னாலைப் பாலத்தில் அமைக்கப்பட்டிருந்த பல இராணுவ காவலரண்கள் விடுதலைப் புலிகளினால் தகர்க்கப்பட்டன. சுமார் பத்துப்படையினர் கொல்லப்பட்டனர் பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

மண்டைதீவிலிருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதலினால் வயோதிபர் ஒருவர் பலியானார். சிறுவனொருவன் கால்களை இழந்தான். சிறுமியொருத்தி படுகாயமுற்றாள்.

பதுளையில் இனந்தெரியாத கோஷ்டியொன்று அதிரடித்தாக்குதலை நடத்தியது. துப்பாக்கிச் சூட்டில் தோட்ட சுப்பிரிண்டன் ஒருவரும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் மரணமடைந்தனர். இக் கோஷ்டியினால் பத்து லட்ச ரூபா கொள்ளையடித்துச் செல்லப்பட்டது.

14-01-92

கடமையில் ஈடுபட்டிருந்த மீனவர்களை சிறீலங்காப் படையினர் கடலில் வைத்து கைதுசெய்து தடுப்புக்காவலில் வைத்திருப்பதை எதிர்த்தும், அவர்களை விடுதலை செய்யுமாறு கோரியும் யாழ்நகரில் பெரும் எண்ணிக்கையிலான மீனவர்களும் அவர்களின் குடும்பத்தினரும், மாணவர்களும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

15-01-92

வலிகாமம் பகுதியில் இன்று மட்டும் வாகன விபத்துக்கள் காரணமாக எட்டுப்பேர் காயமுற்றனர்.

16-01-92

மன்னார் மாவட்டத்தில் சிறிலங்காப் படையினர் மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் நடத்தியதில் பத்துப் படையினர் கொல்லப்பட்டனர். பெருந்தொகை ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

20-01-92

தமிழ் நாட்டிலிருந்து தாயகம் திரும்பி வந்த தமிழீழ அகதிகளில் இருநூறுபேர் சென்னையில்வைத்து கப்பலில் ஏற மறுப்புத் தெரிவித்தனர். தங்களுக்குப் பாதுகாப்பில்லை எனக்கூறி இறுதிநேரத்தில் அவர்கள் மறுத்துவிட்டனர். அறுநூற்றி பதினான்கு ஈழத்தமிழர்கள் தாயகம் புறப்பட்டனர்.

21-01-92

சீனன்குடா விமானத் தளத்தில் மிகப்பெரிய குண்டுவெடிப்புச் சம்பவம் இடம் பெற்றது. நாற்பதிற்கும் மேற்பட்ட விமானப்படையினர் பலியாகினர். நூற்றுக்கணக்கானோர் படுகாயமுற்றனர். ஒன்பது போர் விமானங்கள் சேதமுற்றன. நான்கு விமானங்கள் முற்றாக அழிந்துபோயின.

குச்சவெளியில் சிறிலங்கா இராணுவம் மீது புலிகள் தாக்குதல் நடாத்தியதில் பத்துப் படையினர் உயிரிழந்தனர். பெருமளவு ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

26-01-92

அம்பாறை மாவட்டத்திலுள்ள அரந்தலாவை என்னுமிடத்தில் நிலக்கண்ணி வெடித்ததில் பஸ் சிதறி ஐம்பது பேர் அளவில் பலியாகினர். இதில் அநேகமானோர் விமானப்படையைச் சேர்ந்தவர்கள்.

29-01-92

பொலன்னறுவை மாவட்டத்தின் சிங்கபுர என்னுமிடத்தில் புலிகளின் தாக்குதலில் பதின்நான்கு படையினர் உயிரிழந்தனர். நவீன ஆயுதங்கள் பல கைப்பற்றப்பட்டன.

தொண்டர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ள பலர் தகுதிஅடிப்படையில் தெரிவு செய்யப்படவில்லை எனவும் அவர்களில் அதிகமானோர் அதிபர்கள், அதிகாரிகளது பிள்ளைகள் என்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

30-01-92

கொக்கட்டிச் சோலையில் அறுபத்தேழு தமிழர்கள் கொல்லப்பட்டமைக்கு சிறிலங்கா இராணுவமே பொறுப்பு என அரசாங்கம் ஒப்புக்கொண்டது.

# கலை இலக்கியத்தில் இன்றைய எதிர்பார்ப்பு

சமூகத்தின் உயர் கட்டுமானங்கள் சமூக அடிப்படையைப் பிரதிபலிக்கின்றன எனச் சமூக விஞ்ஞானம் கூறுகின்றது.

நீதி நெறிகள், சட்டங்கள் தத்துவங்கள், கலை, இலக்கியப் படைப்புகள் ஆதியன உயர்கட்டுமானங்கள்.

சமூக அடிப்படை என்பது சமூகத்தின் உண்மையான நிலை. அதாவது சமூக யதார்த்தம்.

சமூக யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் படைப்புகளே யதார்த்தப் படைப்புகள். அவை சமூகத்தின் பிரச்சினைகள், முரண்பாடுகள், வெ. வேறு கருத்து நிலைகள் ஆகியவற்றைத் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன. இதன் மூலம் பிரச்சினைகளுக்கான தீர்வு பற்றிய சிந்தனையைத் தூண்டுகின்றன.

இந்த வகையில், யதார்த்தப் படைப்புகள் ஒரு சமூகக் கடமையை நிறைவேற்றுவனவாகும்.

எனவே இன்றைய சமூக அடிப்படையைப் பிரதிபலிக்கும் படைப்புகளே இன்றைய காலகட்டத்துக்கான சமூகக் கடமையை நிறைவேற்றத் தக்கன என்பது தெளிவு. அந்தகைய படைப்புகளே கலை இலக்கியத்தில் இன்றைய எதிர்பார்ப்புகள்

இன்றைய சமூக அடிப்படை யாது?

வர்க்கங்களாகப் பிரிந்துள்ள எங்கள் சமுதாயத்தில முரண்பாடுகள் இயல்பானவை. அதே நேரத்தில் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கும் நாம் முகம் கொடுக்கின்றோம்.

சிங்களப் பேரினவாதம் தமிழினத்தை முழுமையாக அழித்தொழிக்கும் நோக்கத்தைக் கொண்டிருப்பதால் இப் பேரினவாதத்துக்கு எதிரான போராட்டம் பிரதானமானதாகின்றது.

இலங்கைத் தீவு சிங்களவருக்கே சொந்தமானது என்பதும், ஏனைய இனத்தவர்கள் அந்நியர்கள் என்பதும் சிங்களப் பேரினவாதத்தின் கருத்து. இதற்கு எதிரான கருத்துப் போராட்டம் நடந்துகொண்டிருக்கின்றது.

ஏட்டளவிலும் எழுத்தளவிலும் இருந்த பேரினவாதம் புத்தமத அமைப்புகள், சர்வோதயம் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களிலும், அரசின் நிறுவனங்களிலும் இராணுவத்துக்குள்ளும் அதிக்க சக்தியாக வளர்ந்து நிறுவனப்படுத்தப்பட்ட பேரினவாதம் ஆகிவிட்டது. இது தமிழினத்துக்கு எதிராகத் திட்டமிட்டுச் செயற்படுகின்றது.

தமிழரின் பாரம்பரிய தாயகம் கொஞ்சம் கொஞ்சமாகப் பறிக்கப்படுகின்றது. தொடர்ச்சியான அத் தாயகத்தைத் துண்டாடிக் கூறுபோடும் முயற்சிகள் மணலாற்றில் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழரின் தாயகத்தைப் பறிப்பதையும், தமிழினத்தை அழிப்பதையும் நோக்கமாகக் கொண்ட பேரினவாத நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டம் படிப்படியாக வளர்ந்து இன்று தீர்மானகரமான ஆயுதப்போராட்டமாகப் பரிணமித்துள்ளது.

இப்போராட்டத்தில் நேரடியாகப் பங்கேற்றுத் தியாக உணர்வுடன் போரிடும் போராளிகள் வெவ்வேறு சமூகப் பிரிவுகளிலிருந்து வந்தவர்கள். இவர்களிடையே காணப்படும் ஐக்கியமும் ஒன்றுபட்ட உணர்வும் கருத்து நிலை சார்ந்தது. பாரம்பரிய தாயகத்தை மீட்டுப் பாதுகாக்க வேண்டும் என்பதும், அதில் தமிழினம் தன்னைத் தானே ஆளும் ஆட்சியமைப்பை உருவாக்க வேண்டும் என்பதுமே இக் கருத்து நிலை. சாதி, மத, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் இந்த ஐக்கியம் ஏற்பட்டுள்ளது.

மக்கள் மத்தியில் இவ்வாறான கருத்து நிலை சார்ந்த ஐக்கியம் இன்னும் பூரணமாக ஏற்படவில்லை.

சாதி, மத, பிரதேச வேறுபாட்டுணர்வுகள் இன்னும் மக்கள் மத்தியில் உள்ளன. ஆண் மேலாதிக்கம் இன்றும் நிலவுகின்றது. சீதனக் கொடுமை முற்றாக அழியவில்லை.

இந்த நிலை மாறி அனைத்து மக்களும் இலட்சிய உணர்வுடன் ஐக்கியப் படவேண்டியது காலத்தின் ஒரு தேவை.

அரசு ஆயுதந்தாங்கி நடத்தும் யுத்தத்தோடு மறைமுக யுத்தமொன்றையும் நடத்துகின்றது.

பொருளாதாரத் தடை சகல தமிழ் மக்களுக்கும் எதிராக அரசு நடத்தும் மறைமுக யுத்தம். இதனால் மக்கள் மிகுந்த இன்னல்களுக்குள்ளாகின்றனர். இந்த இன்னல் சகல சமூகப் பிரிவினரையும் பாதிக்கின்றது. இந்த மறைமுக யுத்தத்துக்கு வெற்றிகரமாக முகம்

கொடுக்கவேண்டுமாயின் சகல மக்களும் ஐக்கியப்படவேண்டியது அவசியம்.

சமூகத்தின் அடிமட்ட நிலையிலுள்ள மக்கள் வர்க்க ரீதியான பாதிப்புக்கு உள்ளாகும் நிலையையும் தவிர்த்துக் கொண்டே சிங்களப் பேரின வாதத்துக்கு எதிரான போராட்டம் முன்னேற வேண்டும். இன்று நடைமுறையிலுள்ள இணக்க மன்றுகள் இப் பணியை ஓரளவுக்கு நிறைவேறுகின்றன.

மக்களுக்கிடையிலான பிணக்குகளைத் தீர்ப்பதற்கு நீதிமன்றங்களையே நாட வேண்டியிருந்தது. பல வருடங்கள் தீர்ப்புக்காகக் காத்திருக்கவேண்டும். பெருந்தொகையான பணத்தைச் செலவிட வேண்டும் இது நடைமுறையில் ஏழைகளுக்கு நீதி கிடைக்காத நிலையையே ஏற்படுத்தியது. இன்று நிலைமை மாறிவிட்டது. இணக்க மன்றுகள் மூலம் கால விரயமும் பணவிரயமும் இல்லாமல் பிணக்குகள் மனிதாபிமான ரீதியில் தீர்த்து வைக்கப்படுகின்றன.

நெருக்கடி நிலையைச் சுயநல நோக்கத்துக்காகப் பயன்படுத்தும் சமூகவிரோதிகளும் இல்லாமலில்லை.

இவை இன்றைய சமூக அடிப்படையின் அம்சங்கள்.

இன்றைய கலை, இலக்கியப் படைப்புகள் இவற்றை பிரதிபலிப்பனவாக அமைதல் வேண்டும். கருத்து ரீதியாகவும், சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராக நடைபெறும் இன்றைய போராட்டம் தோல்வியடையக் கூடாது என்ற உணர்வை அவை அடிநாதமாகக் கொண்டிருக்க வேண்டும்.

அத்தகைய படைப்புகளே இன்றைய தேவை. இன்றைய எதிர்பார்ப்பு. □

— உருத்திரா

# 'ஹன்சாட்' என்றால் என்ன?

பாராளுமன்றத்தில் நடைபெறும் விவாதங்களின் உத்தியோக பூர்வமான அதிகார அறிக்கையே ''ஹன்சாட்'' ஆகும். ஹன்சாட் என்பது பிரித்தானியர் ஒருவருடைய பெயராகும். பிரித்தானிய பாராளுமன்றத்தில் நடைபெறும் விவாதங்களைப் பதிவு செய்து உத்தியோக பூர்வ அறிக்கையாக்கியவர்களில் முன்னோடியாகக் கருதப்படும் தோமஸ் ஹேஸன் ஹன்சாட நீண்ட காலமாக இதைச் செய்தார். இதனால் இது ''ஹன்சாட்'' எனப்பெயர் பெறலாயிற்று.

பாராளுமன்றங்களில் நடைபெறும் விவாதங்கள், உரைகள் அனைத்தையும் சரியாகவும், விரிவாகவும் பார்ப்பதற்கு ஹன் சாட் உதவுகின்றது. ஒரு சட்டமூலம் சம்பந்தமாக பாராளுமன்றம் விவாதிக்கின்றபோது ஹன் சாட் அச் சட்ட மூலம் சம்பந்தமான இருபக்கக் கருத்துக்களையும் பதிவு செய்யத் தவறுவதில்லை. ஹன்சாட்டிற்கு அரசாங்கக் கட்சி, எதிர்க்கட்சி என்ற பாகுபாடு கிடையாது.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தவறுதலாக வார்த்தைகளைப் பிரயோகித்தாலும் அதையும் ஹன்சாட் பதிவு செய்துவிடும். ஆனால் படுமோசமான ஊத்தை வார்த்தைகளைக் ஹன் சாட் பதிவு செய்யாது. ஹன்சாட் பதிவு செய்த விடயத்தை சபாநாயகர் தவிர்ந்த வேறொருவராலும் மாற்ற முடியாது. ஹன்சாட் அறிக்கை தயாரிப்பவர் சாதாரண அறிக்கை தயாரிப்பவர் போலல்லாது மிகவும் மேலான தரத்தையுடையவர்.

யோ. ஜெயவதனி
உடுவில் மகளிர் கல்லூரி

அரசியல்

# பால்டிக் நாடுகளின் சுதந்திரப்பிரகடனம்

சார் மன்னனின் ரஷ்யப் பேரரசைப் பற்றிக் குறிப்பிடுகையில் அது "பல்வேறு தேசிய இனங்களின் சிறைக்கூடமாக இருந்தது" என லெனின் கூறினார். இதற்கு அவர் காட்டிய பரிகாரம் சுயநிர்ணய உரிமை.

**ஒவ்வொரு தேசிய இனமும் தனது அரசியல் எதிர்காலத்தைத் தானே சுயமாக நிர்ணயிக்கும் உரிமையே சுயநிர்ணய உரிமை.**

சுயநிர்ணய உரிமை பற்றி மாறுபட்ட விளக்கங்களும் வியாக்கியானங்களும் முன்வைக்கப் பட்ட காரணத்தால் ஸ்டாலின் அதைப் பின்வருமாறு தெளிவுபடுத்தினார். "இரண்டு வருடங்களுக்கு முன்பே இக் கோஷத்தை நாங்கள் கைவிட்டு விட்டோம். ...... எங்கள் வேலைத்திட்டத்தில் நன்கு உருவான, தெட்டத்தெளிவாக விளங்கும் கோஷமான 'தேசிய இனங்களின் அரசியல் பிரிவினை உரிமை' என்ற கோஷம் இடம் பெறுகின்றது. தேவையில்லாமல் தெளிவற்றதாகவுள்ள 'தேசிய சுயநிர்ணய உரிமை' என்னும் கோஷமல்ல."

(தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாகக் கட்சியின் உடனடிக் கடமைகள் பற்றி ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் பத்தாவது மகாநாட்டில் 10-03-1921-இல் சமர்ப்பித்த அறிக்கை.)

தேசிய இனங்கள் பிரிந்து செல்லும் உரிமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது என்பதையே இது காட்டுகின்றது.

தேசிய இனங்களுக்கிடையே உரிமையின் சமத்துவம் பேணப்பட வேண்டும் என்பதும், உரிமை மறுக்கப்படும் தேசிய இனங்கள் பிரிந்து தனியரசு அமைக்கலாம் என்பதுமே இதன் நோக்கம்.

லெனின் முன்வைத்த இக் கோட்பாடு தேசிய இனப் பிரச்சினைக்குச் சரியான தீர்வு என இன்று வரை ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றது. அப்படியிருக்க, இந்த உயரிய கோட்பாட்டைத் தனது வேலைத் திட்டத்தில் உள்ளடக்கியுள்ள சோவியத் ஒன்றியத்துடன் அரை நூற்றாண்டு காலமாக இணைந்திருந்த பால்டிக் குடியரசுகள் இப்போது பிரிந்து செல்லத் தீர்மானித்தது ஏன்?

லெனினின் கோட்பாடு தோற்று விட்டது என்பதையே இது காட்டுகின்றது எனச் சிலர் கூறுகின்றனர். கோட்பாடு பிசகியதா அல்லது நடைமுறை பிசகியதா என்பதை நாம் அறிதல் வேண்டும். உலகின் பல பகுதிகளில் தேசிய இனங்கள் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்ற இக் காலகட்டத்தில் இது பற்றி அறிய வேண்டியது அவசியம்.

லிதுவேனியா, லத்வியா, எஸ்தோனியா என்பனவே பால்டிக் குடியரசுகள் என அழைக்கப் பட்டவை. இவை முன்னர் சுதந்திர நாடுகளாக இருந்தன. பால்டிக் கடலின் கரையோரத்தில் இருப்பதால் அடிக்கடி வேற்று நாட்டுப் படையெடுப்புகளுக்கு உள்ளாகின.

பன்னிரண்டாம் பதின்மூன்றாம் நூற்றாண்டுகளில் ஜெர்மனியர் இந் நாடுகளைக் கைப்பற்றி வைத்திருந்தனர். அவர்களிடமிருந்து டென்மார்க் இவற்றைக் கைப்பற்றியது. பின்னர் சுவீடன் கைப்பற்றியது. மகாபீட்டர் இருபது வருடமாகச் சுவீடனுடன் நடத்திய யுத்தத்தின் விளைவாக இவை ரஷ்யப் பேரரசின் கீழ் வந்தன. பின்னர், முதலாவது உலக யுத்தத்தின் போது ஜெர்மனி கைப்பற்றியது. ஜெர்மனி சரணடைந்ததைத் தொடர்ந்து லிதுவேனியாவும் எஸ்தோனியாவும் 1919 இலும் லத்வியா 192ப இலும் சுதந்திர நாடுகளாகின.

சுதந்திர பால்டிக் நாடுகளுடன் சோவியத் யூனியன் பரஸ்பர உதவி ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டது. இந்த ஒப்பந்தம் நடைமுறையிலிருந்த காலத்திலேயே - 1939 ஆகஸ்ட் 23ந் திகதி சோவியத் - ஜெர்மன் அனாக்கிரமிப்பு ஒப்பந்தமும் கைச்சாத்தாகியது. இந்த ஒப்பந்தத்தோடு சேர்ந்த மொலொடோவும் றிபென்ட்ரொப்பும் கைச்சாத்திட்ட இரகசியக் குறிப்பறிக்கை (Secret Protocol) பால்டிக நாடுகளை ரஷ்யாவின் நலனுக்குரிய பிரதேசத்துக்குள் (Sphere of Interest) உள்ளடக்கியிருந்தனர். இது பால்டிக் நாடுகளைப் பொறுத்த வரையில் சோவியத் யூனியனின் ஆரம்ப நடைமுறைத் தவறு எனலாம்.

நட்புறவு ரீதியிலான ஒப்பந்தமொன்றின் பங்குதாரர்களான நாடுகள் தொடர்பாக வேறொரு நாட்டுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும் போது அந்த நாடுகளுடன் கலந்து பேசியிருக்க வேண்

டும். குறைந்தபட்சம், குறித்த ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்பாவது அந்த நாடுகளுக்கு அது பற்றி அறிவித்திருக்க வேண்டும், சோவியத் யூனியன் அவ்வாறு செய்யவில்லை. சோவியத் யூனியன் பால்டிக் நாடுகள் மீது படையெடுக்கும் வரையும் அந்நாடுகள் இதைப்பற்றி அறிந்திருக்கவில்லை. இத்தவறு பால்டிக் நாடுகள் சோவியத் தலைமையைச் சந்தேகக் கண்ணோடு பார்க்கும் நிலையை உருவாக்கியது. 1940 யூன் 17ந் திகதிக்கும் 23ந் திகதிக்குமிடையில் பால்டிக் நாடுகள் சோவியத் யூனியனால் கைப்பற்றப்பட்டவிதமும் இரண்டாவது உலக யுத்தத்தின் பின் பல்லாயிரக் கணக்கான பால்டிக் மக்கள் களையெடுப்பு என்ற பெயரில் நாடுகடத்தப் பட்டதும் இச் சந்தேக மனோபாவத்தை வளர்ப்பதற்கே உதவின.

சோவியத் தலைமை பற்றிய நம்பிக்கையின்மை மற்றும் சந்தேகப் பின்னணியிலேயே பால்டிக் நாடுகள் சோவியத் ஒன்றியத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டன. இந்நிலையில் சோவியத் யூனியனுடன் உணர்வு பூர்வமாக இணையும் மனோபாவத்தை பால்டிக் மக்களிடம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்வதே சோவியத் தலைமையின் முன்னாலுள்ள கடமையாக இருந்தது. அது நிறைவேற்றப் பட்டதா?

தேசிய இனங்களைப் பொறுத்தவரையில் பாரம்பரிய தாயகத்தின் தனித்துவம் பரம முக்கியமானது. தாயகத்தின் தனித்துவத்துக்குப் பாதிப்பு ஏற்படுவதை எந்தத் தேசிய இனமும் பொறுத்துக் கொண்டிராது. தாயகம் பறிக்கப் படுகின்றதென்பது அத் தேசிய இனம் அழிக்கப்படுகின்றது என்பதற்குச் சமனாகும்.

பால்டிக் குடியரசுகளில் இடம் பெற்ற வெளியார் குடியேற்றங்கள் - பெரும்பாலும் ரஷ்யர்கள - தங்கள் தாயகம் திட்டமிட்டுப் பறிக்கப்படுகின்றதென்ற அச்சத்தை பால்டிக் மக்கள் மத்தியில் ஏற்படுத்தின.

''மறைந்து கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்தின் இறுதிச் சந்ததியினரே நாங்கள் என்ற எண்ணத்துடன் எங்களால் வாழ முடியாது.''

''ஒரு தேசிய இனம் என்ற வகையில் அழிந்து கொண்டிருக்கிறோம் என்ற அச்சம் எங்களைத் தொடர்ந்து வாட்டுகின்றது.''

இவை சோவியத் பத்திரிகையாளர் லியோனித் மிலேனிடம் பால்டிக் மக்கள் தெரிவித்த கருத்துகள் (நியூ ரைம்ஸ் - 44/88)

சோவியத் ஒன்றியத்துடன் இணைக்கப்பட்ட பின் பால்டிக் குடியரசுகளில் சுதேச மக்களின் சனத்தொகை விகிதாசாரம் கணிசமான அளவு வீழ்ச்சியடைந்திருக்கின்றது.

லிதுவேனியாவின் தற்போதைய சனத்தொகையில் 80 வீதமானோரே லிதுவேனியர்கள். எஸ்தோனியாவில் 65 வீதம் பேரே எஸ்தோனியர்கள். லத்வியாவில் 54 வீதமானோர் மாத்திரமே லத்வியர்கள். (புரொன்ட்லைன் - ஏப்ரல் 14 - 27, 1990)

விவசாய நாடுகளாக இருந்த பால்டிக் குடியரசுகளைத் தொழில்மயப்படுத்திய போது வெளியிலிருந்து தொழிலாளர்களைக் கொண்டுவர வேண்டியிருந்ததால் வெளியார் தொகை அதிகரித்தது எனச் சோவியத் தரப்பில் சொல்லப்பட்டது.

இது ஏற்புடையதல்ல. பொருளாதாரத் திட்டமிடலின் போது தேசிய இனங்களின் நலன்களையும் அபிலாஷைகளையும் கவனத்துக்கெடுக்காமலிருப்பது இன முரண்பாடுகளை ஏற்படுத்தக்கூடிய தவறென்பதை உணர்ந்திருக்க வேண்டும்.

அடுத்ததாக மொழியை எடுத்துப் பார்ப்போம். இவ்விடயத்திலும் திருப்திகரமான நடைமுறைகள் இடம்பெறவில்லை, சுதேச மொழிகளிலும் பார்க்க ரஷ்ய மொழியே அதிக செல்வாக்கைப் பெற்றிருந்தது. சுதந்திரக் கோரிக்கையை முன்வைப்பதற்காக மக்கள் முன்னணி அமைப்புகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே பால்டிக் குடியரசுகளின் சுதேச மொழிகள் சோவியத் யூனியனின் உத்தியோக மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டன.

இக் குடியரசுகளில் மத்திய அரசினால் மேற் கொள்ளப்பட்ட பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் பால்டிக் மக்கள் ஓரங்கட்டப் பட்டனர் என்பதும். ரஷ்யர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது என்பதும் மக்கள் முன்னணியின் (Popular Front) குற்றச்சாட்டுகள். இதில் உண்மை இல்லையென்று சொல்ல முடியாது. பெரும்பாலான தொழில் நிலையங்களில் வெளியாரின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது. இத்தொழில் நிலையங்களைச் சேர்ந்த வெளியார் மக்கள் முன்னணியை எதிர்த்துக் கூட்டாகச் செயற்பட்டதால் சுதேச மக்களுக்கும் இவர்களுக்குமிடையிலான முரண்பாடு மேலும் கூர்மையடைந்தது. எஸ்தோனியாவில் அமைக்கப்பட்ட கூட்டுத் தொழிலகச் சபைகளை (Councils of work Collectives) உதாரணமாகக் கூறலாம். இவை மக்கள் முன்னணிக்கு எதிராகத் தொழில் நிலையங்களில் வெளியாரால் அமைக்கப் பட்டவை.

பெரிய இனமான ரஷ்ய இனம் காலப்போக்கில் தங்களை விழுங்கி விடும் என்ற அச்சம் பால்டிக் மக்களிடம் வளர்ந்து கொண்டிருந்தது. அதுவே மக்களின் ஏகோபித்த ஆதரவு பெற்ற மக்கள் முன்னணி உருவாகுவதற்குக் காரணமாக இருந்தது. இந்த அச்சம்

(17 ம் பக்கம் பார்க்க)

# குழந்தை இன்னும் பேசவில்லையா...?

இனியவற்றுள் எல்லாம் இனியது குழந்தை மொழி. குழலிலும் யாழிலும் குழந்தையின் மழலை இனியது என்கிறார் திருவள்ளுவர். குழந்தையின் பேச்சைக் கேட்பதிலேயே தாய் மகிழ்ச்சி அடைகிறாள். குழந்தை உரிய வயதிற் பேசாவிட்டால் பெற்றாரும் உற்றாரும் அடையும் துன்பத்துக்கு அளவில்லை பேசாத குழந்தை பேசவேண்டும் என்பதற்காகத் தாய் கல்லு வைத்தகோயில் எல்லாம் கையெடுத்துத் தொழுகின்றாள்.

பச்சிளங் குழந்தைப் பருவத்தில் குழந்தை பிறர் பேச்சைக் கவனிக்கவும் அதன் பயனை உணரவும் அறியாத நிலையில் இருக்கின்றது. செங்கீரைப் பருவத்தில் அதன் வாயிலிருந்து காரண மின்றி இயல்பாகப் பல ஒலிகள் எழுகின்றன. அது சிறிது வளர்ந்ததும் மழலை பேசத் தொடங்குகிறது, பின் படிப்படியாகப் பண்பட்ட மொழியினைப் பேசத் தொடங்குகிறது.

தாய் குழந்தையைத் தாலாட்டும் போதும் பிள்ளையுடன் கொஞ்சும் மொழிபேசும் போதும், சாய்ந்தாடல், சப்பாணி, ஆனை ஆடுதல் முதலிய செயற பாடல்கள் பாடும் போதும் குழந்தை பயின்று மொழிபேசுவதற்கான வாய்ப்புக் கிடைக்கிறது.

குழந்தை பேசவில்லையென்றால் பெற்றோர் அடையும் துன்பத்துக்கு அளவேயில்லை. உரிய பருவம் கடந்தும் குழந்தை பேசாமலிருப்பது ஏன்? உடல், உளம் சார்ந்த பல்வேறு காரணிகளால் குழந்தையின் பேச்சுப் பாதிக்கப்படுகிறது. இதற்கான காரணிகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்:

1. பிறருடைய பேச்சை விளங்கிக் கொள்ள முடியாதிருத்தல்.
2. ஒலிகளைச் சரியாகப் பிறப்பிக்க முடியாதிருத்தல்.
3. வசனங்களை ஆக்கும் வகையில் சரியான சொற்களைப் பொருத்தமான ஒழுங்கில் கூறமுடியாதிருத்தல்.

தாம் கூறும் கருத்துக்களைப் பிறர் விளங்கிக் கொள்ளாமல் இருக்கும் போது குழந்தைகளுக்கு மனமுறிவு ஏற்படுகிறது. எவ்வாறாவது தான் பேசுவதைப் பிறர் விளங்கிக் கொள்ளவேண்டும் என்பதற்கான முயற்சியில் பிள்ளை ஈடுபடுகிறது. இவ்வேளைகளில் குழந்தையிடம் நடத்தைச் சிக்கல்கள் தோன்றுகின்றது.


குழந்தை சமூக இணக்க முள்ளதாகவும் பண்பாடு மிக்கதாகவும் வளரவேண்டுமானால் அது பேசுவது இன்றியமையாததாகும் உரிய பருவத்தில் பேசாத குழந்தைகளை எவ்வாறு பேசத் தூண்டலாம்?

- குழந்தை தனது கருத்தை வெளிப்படுத்த முயலும். அதனுடைய பேச்சுப் புரியாவிட்டாலும் நாம் அது பேசுவதைக் கூர்ந்து கேட்கவேண்டும். அதன் கருத்தைக் கேட்பதில் நாம் ஆர்வம் கொண்டுள்ளோம் என்பதைக் குழந்தை உணரச் செய்யவேண்டும்.
- பிறர் பேசுவதைக் கேட்பதன் மூலமே குழந்தை பேசக் கற்கிறது. எனவே, குழந்தை பிறரோடு மகிழ்ச்சியாகவும் நம்பிக்கையுடனும் செயற்பட வாய்ப்பளிக்க வேண்டும். இச்செயற்பாடுகள் பிள்ளை கருத்து வெளிப்படுத்துவதை - பேசுவதைத் தூண்டுவனவாக அமைய வேண்டும். ஒத்தவயதுடைய இனிய குழந்தைகளோடு மகிழ்ச்சியுடன் விளையாடும் சூழல் பிள்ளை பேசுவதற்கு ஏற்றதாக அமையும்.
- பிறருடைய பேச்சைக் குழந்தை விளங்கிக் கொள்ளமுடியாதிருந்தால் சிறிய வசனங்களுடன் எளிமையாகப் பேச வேண்டும். பேசும் போது குழந்தையை முற்றாக உங்கள் பால் ஈர்க்கக் கூடியதாகப் பேசவேண்டும்.
- உங்கள் பேச்சைக் குழந்தை விளங்க முடியாமல் குழப்பமுற்றிருந்தால் அது அதனை விளங்கிக் கொள்ளக் கால அவகாசம் அளித்தல்வேண்டும். கூறியதை வெவ்வேறு முறைகளில் மீளக் கூறுவதன் மூலம் பேச்சின் கருத்து விளக்கத்திற்கு உதவலாம். நீங்கள் செயற்படும்போது அது பற்றிக் குழந்தையுடன் பேசுங்கள் கேட்பதன் மூலமும் பார்ப்பதன் மூலமும் குழந்தைக்கு அதிக விளக்கம் ஏற்படுகிறது.
- குழந்தை ஒலியைத் தவறாக ஒலிக்கும் போது இடைமறித்து அதனைத் திருத்த முயலக் கூடாது. குழந்தையின் கருத்தைத் திருந்திய வடிவில் நீங்கள் மீளக் கூறுவது சிறந்த முறையாகும்.
- குழந்தை பேசும் போது ஏற்படும் இலக்கண அமைப்புத் தவறுகளைக் குறுக்கிட்டுத் திருத்த முயலக் கூடாது. சரியான அமைப்புடன் அதனை மீளக் கூறுவதன் மூலம் குழந்தை விரைவில் சரியாகப் பேசக் கற்றுக் கொள்ளும்.

— அரி. சதாநந்தன்

# வேலிகளைவிட்டு வெளியே...

—முருகேசு



கடுமையான சோழகக் காற்று. முற்றத்தில் நின்ற பனைமரம் காவடி ஆடிக்கொண்டு இருந்தது. வட்டுத் தெரியாமல் சுமந்து நின்ற குலைகளைக் கண்டு பொன்னம்மாவுக்கு ஒரு ஏக்கத்தின் சாயல். உண்மைதான். நிறைந்த வளத்தோடு திரியாயில் வாழ்ந்தவள். அவளுடைய வாழ்வு இப்படியாகி இருக்குமென்று யாரும் எண்ணி இருக்கமாட்டார்கள்.

இலங்கை அரசின் இனஅழிப்பு நடவடிக்கைகளினால் அவளும் அகதியாக்கப்பட்டாள். அவள் குடும்பம் குழமுனையில் குடியேறியது.

நாலுபேரை வைத்து சிறப்பாக தொழில் நடத்திய கணபதிபபிள்ளைக்கு தம் மண்ணையும், வளத்தையும் விட்டு வந்ததும் தன் சொத்துக்கள், சுகங்கள் இழந்ததும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. திடீரென்று மீளாத் துயிலில் சுமையை மாற்றிவிட்டார்.

பனை மரத்தை வெறித்துப் பார்த்துக் கொண்ட பொன்னம்மா கிழக்குப் பக்கமாக கடலையைப் பார்க்கிறாள். அந்தக் களப்புக் கடலில் ஓரமாக இருந்த கொட்டில் வீட்டில் எழுந்து வரும் சூரிய கதிரின் தாக்கம் சுள் என்று கொட்டியது.




திரியாயில் இருந்து வந்து இரண்டு ஆண்டுகள் ஆகி விட்டது. இதற்குள் அவள் பட்ட கஷ்டம்..... கணபதிப்பிள்ளையர் சுகமாகப் போய்விட்டார். நான் ... ஒரு நீண்ட பெருமூச்சை [பொன்னம்மா விடுகிறாள்.

என்னதான் பெண்கள் விடுதலையைப்பற்றி பேசினாலும் எமது மண்ணில் பெண்கள் ஒரு பாரம் என்ற நினைவு. இது பொன்னம்மாவை ஒரு சுமையாக அழுத்தியது. அந்த நிவாரண உதவியுடன் இந்த மூன்று குமருகளையும்... காய்த்துக் குலுங்கும் பனை மரத்தின் நிலை கூட தனக்கு இல்லையே.

அது எப்படி நடக்கும்

பொன்னம்மா வாழ்ந்த சமூக அமைப்பு அப்படியானது.

"அம்மா, ஏன் இடிந்து போய் இருக்கிறாய்? நான் இன்றைக்குப் போகவேணும்."

"ஏன் பிள்ளை நேற்றுத்தான் வந்தனி"

'ஓம் அம்மா வவனியா நிலமை சரியில்லை சில வேளை தொடர்ந்தும் பிரச்சினை வரலாம.

"அதுக்க நீயும் போகப்போறியா"

"அம்மா என்மீது போடப்பட்ட விலங்கை நான் உடைச்சிட்டன் இனி எப்ப போனாலும் என்ன."

கமலி உண்மையில் ஒரு துணிச்சல்காரிதான் தனது ஒரே சொத்தாக இருந்த காதுத்தோட்டை விற்றுக் கொண்டு திடீரென்று காணா

வல் போய்விட்டாள். பொன்னம்மா கணவனின் நினைவாக எவ்வளவோ கஷ்டத்தின் மத்தியிலும் வைத்துப் பூசித்த சைக்கிளையும் கொண்டு ஓடி விட்டாள்.

பொன்னம்மா உண்மையில் இடிந்து போனாள். ஊருக்கும் உலகத்துக்கும் பயந்தல்ல. கணவனின் நினைவாக இருந்த சயிக்கிளை நினைப்பதா துன்பச் சுமையைத் தாங்க முடியாத தன் மகளை நினைப்பதா, தன்னையும் தன் வளத்தையும் பறித்தெடுத்த இந்தக் கொடிய அரசை நினைப்பதா. கமலிக்கு இங்கு யாருமே ஒட்டுறவுக்கிடையாது. எங்கே போயிருப்பாள்.

அந்த கிழிந்துபோன பாயை நகத்தால் கீறிக் கொண்டு நிலத்தைப் பார்த்தபடியே இருக்கிறாள். அவளது கண்களில் இருந்து துளிகள் தானாகச் சொரிகின்றது.

அன்று காலைதான் கமலி சயிக்கிளில் நிறைய முட்டை முடிச்சுக்களுடன் வந்திருந்தாள். "எடி கமலி ---- நீ செய்த வேலை சரியோ? ஏனடி நான் ஒருத்தி இருக்கிறன் என்ற நினைப்பு உனக்கு இல்லை."

"ஏன் இல்லாமல்" அதுதான் வந்தனான்.

"அல்லாட்டிக்கு வராயோ?" "குடும்பம் என்று ஒன்று இருக்கும் மட்டும் வரத்தானே வேணும்."

பொன்னம்மாவின் கண்கள் பனித்தன. கமலி ஒரு குடும்பம் நடத்தும் வயதை சொல்லுகிறாள். இது பொன்னம்மாவின் அடைத்திருக்கும் தொண்டையை திறந்து கத்த வேண்டும்போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

"அம்மா ஏன் அழுகிறாய் நான் என்னத்தைச் செய்திட்டன். அல்லது என்னத்தைச் சொல்லிப் போட்டன். நாங்கள் பெண்கள்தான். எங்களைச் சுற்றி நாங்களே வேலி போடுறம் யாரும் எங்களுக்கு வேலி போடேல்ல எங்கட தேவைகளை நாங்கள் நிறைவேற்றுவதும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதும் எந்தப் பிழையும் இல்ல. நான் பழைய மரபுகளையும் சம்பிரதாயங்களையும் உடைத்திருக்கிறன். ஏன்? நாங்களும் வாழ வேண்டும் நாங்கள் இன்று ஒரு சமூக மாற்றக் காலத்தில் வாழ்கிறம். அதுக்கு ஈடு கொடுக்கவும் வேணும். பசியையும் வறுமையையும் சொல்லி போராட்டத்தை கொச்சைப் படுத்தாமல் போராட்டத்தில் ஒரு அங்கமாக நாங்கள் நிமிர வேணும். அது காலத்தின் தேவை. நான் பெண்தான் அதுக்காக எதுவும் செய்ய முடியாதவள் அல்ல. நான் எடுத்த முடிவு வெறுமன ஒரு குடும்ப சுமையை இறக்க மட்டும் தான் என்று எண்ணாதே. அது நாளைய பெண்கள் விடுதலைக்கு ஒரு அத்திவாரமாகவும் அமையும்."

கமலி தாயைப் பார்க்கிறாள். "ஏனம்மா யோசிக்கிறாய் இத்தனை நாளும் எங்கள் வீட்டில் இல்லைப் பாட்டே பாடினோம் மூன்று முழு நாட்கள் என்னில் நான் நம்பிக்கை வைத்தேன். இதனால் எங்களுக்கு கஷ்ட நிவாரணம் கிடைத்தது. இந்தா"

கமலி ஒரு 50 ரூபாவை எடுத்து தாயிடம் கொடுக்கிறாள். "நல்ல கறியாக வாங்கியா. கன நாளைக்குப் பிறகு ஒரு நல்ல சாப்பாடாக சாப்பிடுவம்."

பொன்னம்மா ஒன்றும் பேசவில்லை. அவள் கண்கள் மட்டும் நீரைச் சொரிந்து கொண்டிருந்தது.

அம்மா... "ஏனணை சும்மா அழுகிறாய். நான் என்ன கெட்டா விட்டன்."

"நேர்மையாக ஒரு சமூக விடிவுக்கு வழி காட்டினேன். வவனியா வியாபாரம் ஆண்களுக்கு மட்டும் தானா. அல்லது பெண்கள் அதை செய்யக்கூடாதா"

கமலி தாயோடு பேசிக்கொண்டிருப்பதைக் கேட்ட விசையா –

"அக்கா, நானும் ஒரு முடிவுக்கு வந்திட்டன்"

"என்னடி விசையா?"

"நானும் எனது வேலியை உடைக்கப் போறன்."

"என்னடி சொல்லு. நீயும் வவனியாவுக்கு வரப்போறியே!"

நிதானமாக "இல்லையக்கா நெடுநாளாக எனக்கொரு ஆசை அம்மாவின் நிலையும் எமது குடும்ப சுமையும் எனது ஆசையை அடக்கி விட்டது. அந்த ஆசையை நிறைவேற்ற நீ ஒரு வகையில் உதவி தான் செய்திருக்கிறாய்."

"என்னடி சொல்லன்." "எனது மண்ணையும், மக்களின் வாழ்வையும் சீரழித்தவர்களையும் எதிர்க்கப் போறன்."

"அதுக்கு....."

"நீ எப்படி குடும்ப சுமையை இறக்க விலங்கை ஒடித்தாயோ" அதேபோல எனது மண்ணை மீட்க..." "விஜயா..." தாய் கத்தினாள். கமலி இடைமறித்தாள்.

"சரிதானம்மா, விஜயா சொல்வதும் ஞாயம். நாங்கள் எல்லோரும் ஒரு நோக்கத்துக்காக ஒன்று சேர வேணும் அதுவும் எங்கள் மண்தான் எவ்வளவு கூடுதலான இழப்புக்களைச் சந்தித்தது. மரணம் எப்பொழுதும்வரும்.

இது அவளின் நல்ல முடிவுதான். விஜயா அம்மாவும் நானும் உன்னைக் கூட்டிக் கொண்டு போய் விடுறம். உனது ஆசையை எங்களோடு பகிர்ந்தது நல்லது. சொல்லாமல் ஓடி இருந்தால் என்னாலும் தாங்கேலாதுதான். ❀

# தமிழ் மாணவர் பிரச்சினையும் சிங்களப் பேரினவாதமும்

— காங்கேயன்

மாணவர்கள் சதாகாலமும் மாணவர்களாக இருப்பவர்களல்ல. அவர்கள் நாளைய சமுதாயத்தை நிர்மாணிக்கும் சிற்பிகளாக உருவாகப் போகின்றவர்கள். ஒரு தேசத்தின் நாளைய உயர்வும் தாழ்வும் இன்றைய மாணவர்களின் கைகளிலேயே உள்ளன. எனவே, அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவதானத்துடன் அணுகப்பட வேண்டியவை. சிரத்தையுடன் கவனிக்கப்பட வேண்டியவை.

தமிழ் மாணவர்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து நிற்கின்றனர். உயர்கல்விக்கான கதவு அவர்களுக்கு அடைக்கப்பட்டுள்ளது என்றே சொல்லலாம்.

மொழிவாரித் தரப்படுத்தல் வெட்ட வெளிச்சமாகத் தெரியும் வகையில் தமிழ் மாணவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை. மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது புலப்படாதன வான நிர்வாக நடவடிக்கைகள் மூலம் இப்போது தமிழ் மாணவரின உயர்கல்வி வாய்ப்பு மறுக்கப்படுகின்றது.

உயர்கல்வியை நாடி நிற்போரின் எண்ணிக்கைக்கு ஏற்ப அதற்கான வசதிகள் இல்லை. இந் நிலையில் அரச யந்திரம் சிங்கள மாணவர் பக்கம் சரிந்து நிற்பதால் சிங்கள மாணவரே மிகக் கூடுதலாக நன்மையடைகின்றனர். தமிழ் மாணவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். நவீன தொழில்நுட்ப அறிவைப் பெறுவதற்கான வசதிகளும் வாய்ப்புகளும் கூடச் சிங்கள மாணவர்களுக்கு இருப்பதைப் போலத் தமிழ் மாணவர்களுக்கு இல்லை. குறிப்பாக இத்துறை சார்ந்த ஆய்வுகளில் தங்கள் திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பு தமிழ் மாணவர்களுக்கு இல்லை.

வேலை வாய்ப்பிலும் தமிழர் புறக்கணிக்கப்படுகின்றனர். இது கற்பதனால் பலனில்லை என்ற உணர்வைத் தமிழ் மாணவர்களிடம் ஏற்படுத்துகின்றது.

இதற்கெல்லாம் பௌத்த - சிங்களப் பேரினவாதமே மூலகாரணமாகும்.

கி. பி நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனக் கருதப்படும் தீபவம்ச காலத்தில் உருவாகிய இப் பேரினவாதக் கருத்துகள் கி. பி. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனக் கருதப்படும் மகாவம்ச காலத்தில் மேலும் மெருகூட்டப்பட்டன. இலங்கைத் தீவின் மூத்த குடியினரும் முதன்மைக் குடியினரும் பௌத்த - சிங்களவரே என்பதும், இத் தீவு அவர்களுக்கே சொந்தமானது என்பதும், இப்பேரினவாதத்தின் அடிநாதக் கருத்துகள்.

விஜயனின் வருகை என்ற கட்டுக்கதை பௌத்த - சிங்களப் பேரினவாதத்துக்கு அடிப்படையாக அமைகின்றது. விஜயனின் வருகையுடனேயே இலங்கையின் வரலாறு ஆரம்பிக்கின்றது என்பது மகாவம்சம் முன்வைக்கும் கருத்து. விஜயனின் வருகையுடன் புத்த மதத்தையும் சிங்கள இனத்தையும் மகாவம்சம் தொடர்பு படுத்துகின்றது.

விஜயனின் வருகையைத் தொடர்ந்து, புத்தரின் விருப்பத்துக்கிணங்க அவரது தேவதாகணங்களுள் ஒருவரான உப்பலாவண்ணர் இலங்கைக்கு வந்தார் என்றும், புத்த தர்மத்தைப் பேணிக் காப்பதற்காக விஜயனுக்கும் அவனது தோழர்களுக்கும் புனிதநீர் தெளித்தும் புனிதநூல் கட்டியும் பாதுகாப்பளித்தார் என்றும் மகாவம்சத்தில் சொல்லப்பட்டுள்ளது.

சிங்கபாகு என்ற பெயரிலிருந்தே சிங்கள இனம் என்ற பெயர் வந்தது எனவும், சிங்கபாகுவின் மகன் விஜயனே முதலாவது சிங்கள அரசன் எனவும் கூறும் மகாவம்சம் "இவர்கள் எல்லோரும்" சிங்களவர் என அழைக்கப்படலாயினர் என்றும் கூறுகின்றது. "இவர்கள் எல்லோரும்" என்ற பதத்துக்கான விளக்கம் மகாவம்சத்தில் இல்லை எனவும், மகாவம்சத்துக்கு வியாக்கியானம் கூறும் வகையில் எழுதப்பட்ட 'வம்சத்தப்பகாசினி' என்ற நூலிலேயே இது விளக்கப்படுகின்றது எனவும் மகாவம்சம் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் கூறுகின்றனர். 'வம்சத்தப்பகாசினி' கூறும் விளக்கத்தின்படி, விஜயனின் எழுநூறு தோழர்களும் அவர்களின் பிற்சந்ததியினருமே அப்பதத்தினால் சுட்டப்பட்டனர். பாண்டிய

## கல்வி

அரசகுமாரி விஜயனிடம் வந்தபோது தன்னுடன் ஆயிரம் 'சேவையாளர்' குடும்பங்களை அழைத்து வந்தாள் என மகாவம்சம் கூறுகின்றது. அந்த ஆயிரம் குடும்பங்களும் மகாவம்சத்தின் சிங்களவர் என்ற வரையறைக்குள் சேர்க்கப்படவில்லை. பிரபுத்துவ அடிப்படையிலேயே சிங்கள இனத்தை அடையாளங்காட்ட மகாவம்சம் முனைந்தது என்பது இதிலிருந்து தெரிகின்றது.

எனினும், பேரினவாதம் வளர்ந்து வந்த நிலையில் சிங்கள இனம் பற்றிய கருத்தை விரிவுபடுத்த வேண்டிய புறவயத்தேவை பிற்காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும். மகாவம்சத்துக்குப் பிற்பட்ட காலத்தில் 'குறுலுகோமி' என்பவரால் எழுதப்பட்ட 'தர்மபிரதீபிகா' என்ற நூல் இத்தேவையைப் பூர்த்தி செய்கின்றது. அது, விஜயனின் வம்சத்தினரே சிங்கள அரச வம்சத்தினர் என்ற மகாவம்சக் கருத்தை வலியுறுத்தும் அதே வேளையில், அரச வம்சத்தின் பெயரையே அவர்கள் ஆண்ட தீவும் பெற்றது எனவும், அத் தீவில் வாழ்ந்த மக்களும் அப் பெயரைப் பெற்றனர் எனவும் கூறுகின்றது. இலங்கையின் குடியினர் அனைவரும் சிங்களவராகவே இருந்தனர் என்ற கருத்து இதன் மூலம் முன்வைக்கப்படுகின்றது. இந்த அடிப்படையிலேயே அனகாரிக தர்மபால போன்ற பிற்காலப் பேரினவாதிகள் பௌத்த - சிங்களவர் மாத்திரம் ''மண்ணின் மக்கள்'' எனவும், மற்றையோர் அந்நியர் எனவும் கூறத் தலைப்பட்டனர்.

இக் கருத்து சிங்கள மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றி விட்டது. கலாநிதி சேனக பண்டார நாயக, கலாநிதி லெஸ்லி குணவர்த்தன போன்றோர் முன்வைக்கும் சரியான கருத்துக்கள் எடுபட முடியாத அளவுக்குப் பேரினவாதக் கருத்துகள் வேரூன்றி விட்டன.

பிரித்தானியாவுக்குப் பின் இத் தீவின் ஆட்சிக்கட்டிலேறிய எல்லா அரசாங்கங்களும் பௌத்த - சிங்களப் பேரினவாதக் கருத்துகளுக்கு முற்று முழுதாக உட்பட்டிருந்தவையே. சகல அரசாங்கச் செயற்பாடுகளும் இப்பேரினவாத நோக்கங்களை நிறைவேற்றுவனவாகவே இருந்தன. இன்றும் அவ்வாறே உள்ளன. இனியும் அவ்வாறே இருக்கப் போகின்றன. இதற்குக் கல்விக்கொள்கை விதிவிலக்கல்ல.

எவ்வளவு தான் கல்விச் சீர்திருத்தங்கள் வந்தாலும், அவை பேரினவாதிகளால் நடைமுறைப்படுத்தப்படும் நிலை தொடரும் வரை தமிழ் மாணவர்களின் கல்விப் பிரச்சினைகள் தீராத பிரச்சினைகளே.

தமிழ் மாணவர்களின் கல்விப் பிரச்சினைகள் தீர வேண்டுமாயின், அவர்களுக்கான கல்விக் கொள்கையைத் திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றில் பேரினவாதிகளின் சம்பந்தம் இருத்தலாகாது. தமிழரின் தாயகத்தில் சுயாட்சி அமைப்பு ஏற்படுவதன் மூலமே இது சாத்தியமாகும்.

---

## பால்டிக் நாடு...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வளவுக்கு மக்கள் மத்தியில் வியாபித்திருந்தது என்பதை. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்து சுதந்திரமாக இயங்குவதென லிதுவேனிய கம்யூனிஸ்ட் கட்சி 20 - 12 - 1989இல் தீர்மானமியற்றியதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்.

'சுயநிர்ணய உரிமை' என்ற லெனினியக் கோட்பாட்டின் அடிப்படையில் பால்டிக் குடியரசுகள் பிரிந்து செல்லத் தீர்மானித்தன. அக் கோட்பாட்டின் பிரதான அம்சமாகிய 'உரிமைகளின் சமத்துவம் பேணல்' சரிவர நடைமுறைப் படுத்தப் பட்டிருந்தால் இந்நிலை தோன்றியிருக்காது. எனவே, சோவியத் தலைமையின் நடைமுறை பிசகியதே யொழிய லெனினியக் கோட்பாடு பிசகவில்லை.

'உயரிய கோட்பாடுகள் பேச்சளவிலும் எழுத்தளவிலும் இருந்தால் மட்டும் போதாது நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்' என்பது பால்டிக் விவகாரம் கற்றுத்தரும் பாடமாகும்.

---

## முதலுதவியின் அவசியம்

ஒருவருக்கு நோயோ அல்லது விபத்தோ ஏற்படும்போது முதலுதவிச் சிகிச்சை அளிக்க வேண்டியது மிகவும் முக்கியம். எனவே வயது வித்தியாசமின்றி ஒவ்வொருவரும் முதலுதவி பற்றிய அறிவைப் பெற்றிருக்க வேண்டும்.

வயது முதிர்ந்தவர்கள் முதலுதவி பற்றிய அறிவைப் பெறுவதற்கு முனவருவது குறைவாகவே உள்ளது. இளவயதுக் காரருடன் ஒன்றாக இருந்து முதலுதவி வகுப்பில் படிப்பதற்கு அவர்கள் வெட்கப்படுகின்றார்கள். இளவயதுக்காரர் தங்களைக் கேலி செய்வார்கள் என்று அவர்கள் நினைககிறார்கள்.

இன்றைய நிலையில் முதலுதவி பற்றிய அறிவு மிகமிக அவசியம். இப்போது வைத்திய வசதிகளும் வைத்தியசாலைக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகளும் மிகவும் குறைவாகவே உள்ளன. எனவே எலலோரும் முதலுதவி பற்றிய அறிவைப் பெற்றிருக்க வேண்டும். வயது முதிர்ந்தவர்களும வெடகத்தை விட்டு இந்த அறிவைப் பெறவேண்டும். ☐ கதிரவன் ☐

# நாம் வித்தியாசமானவர்கள்

யாழ் குடாநாட்டைச் சுற்றி போர் மேகம் சூழ்ந்து கொண்டிருப்பது தெரிகிறது. இதனால் மக்கள் மனங்களிலும் பயம், பீதி என்பன ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன.

நமது வான்வெளியில் சில நாட்களாக இடைவிடாது கேட்கும் இரைச்சல்கள் ஏதோ ஒன்றை அறிவித்த வண்ணமுள்ளன.

தெற்கில் பேச்சுவார்த்தைகளுக்கான நடவடிக்கைகளும் தீர்வுக்கான திட்டங்களும் முளைவிடும் முன்னமே பேரினவாத சக்திகள் அவற்றைக் குழப்பவும் எதிர்க்கவும் மும்முரமாகவுள்ளன.

தினசரி வடபகுதி சிறீலங்கா இராணுவ முகாம்களில் படைகள் குவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இச் சந்தர்ப்பத்தில் சர்வதேச நாடுகளும் அரசுக்கு நிதிவழங்கும் நிறுவனங்களும் போரைத் தவிர்த்து பேச்சுவார்த்தையை தொடங்கவேண்டுமென அரசை நெருக்கிவருகின்றன.

இந்நிலையில் என்ன நடக்கப் போகின்றது என்பதை அறிய தினசரி பத்திரிகைச் செய்திகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எதனையும் தீர்மானிக்க முடியாத மனநிலையிலிருக்கிறோம்.

பேச்சுவார்த்தைகள் நடக்க பல முட்டுக்கட்டைகள் தென்னிலங்கை பேரினவாதிகளால் மேற்கொள்ளப் பட்டு வருவதால் பேச்சுவார்த்தைகள் தொடர சாத்தியங்கள் குறைவாகத் தென்பட்டாலும் சில சமயம் நாம் எதிர்பாராதவிதமாக பேச்சுவார்த்தைகள் நடக்கலாம்.

நாம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதைப்போல திடீரென பெரும் சமர் ஒன்றும் மூளலாம்.

பொது மக்களாகிய நாம் எதற்கும் தயாராக இருக்கத் துணிவதே முக்கியமானதாகும்.

எம்மைப் பொறுத்த வரையில் போர் என்பதும் போராட்ட நெருக்கடிகளுள் முகம் கொடுத்து வாழ்வதென்பதும் புதிய விடயமல்ல.

யாழ் கோட்டைக்குள் இருந்த சிறீலங்கா இராணுவத்துடன் இறுதியாக சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் நமக்கொரு பயிற்சி ஏற்பட்டு விட்டது.

தினசரி ஏழு எட்டு என விமானங்கள் இடைவிடாது குண்டுமழை பொழிந்து கொண்டிருந்த வேளையில் கூட தாக்குப் பிடித்து இருந்திருக்கிறோம்.

ஆரம்பத்தில் பயந்த சிறு குழந்தைகள் கூட பின்னர் பயம் மறைந்து விமானக்குண்டு வீச்சைக் கூட வேடிக்கை நிகழ்வாக பார்த்து ரசிக்கத் தொடங்கியமை நினைவிருக்கலாம்.

வானை அண்ணாந்து பார்த்து "இது பொம்பர். இது அவ்ரோ இது. சீ பிளேன். இது சகடை" என கண்டு பிடித்து விளையாடினர்.

இதனை ஏன் இங்கு குறிப்பிடுகின்றேன் என்றால் - போர்க்காலத்தில் நம் உடலைப் பாதுகாத்துக் கொள்வது எவ்வளவு முக்கியமோ அதைப்போல் மனதையும் அச்சத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வது மிக மிக முக்கியம்.



- விவேக்

எதிரியினால் போடப்பட்ட பொருளாதார, போக்குவரத்துத் தடைகளுக்கிடையேயும் முதலில் சிரமப் பட்டு நாளடைவில் எதிர்நீச்சலடித்து வாழப்பழகி விட்டோம்

வன்னிக்கும் குடாநாட்டிற்குமிடையிலான போக்குவரத்துத் தடை மிக மோசமானதாக இருப்பினும் நாம் போய் வந்து கொண்டுதான் இருக்கிறோம்.

மணல்வெளிகளையும், சேற்றுநிலங்களையும் நீர்த் தேக்கங்களையும் பல மைல்கள் கடந்து நடந்து தேவையான பொருட்களை தோள்களில் சுமந்தும் கொண்டு வந்து சேர்க்கிறோம்.

இடையூறுகளைக் கூட இன்மையானதாக்கி பயணித்துக் கொண்டுதானிருக்கிறோம்.

உண்மையில் நாம் வித்தியாசமானவர்கள்தாம்!

எம் வாழ்நிலையை எண்ணிப் பார்க்கும் போது எதிரிக்குக்கூட வியப்பாகத்தானிருக்கும்

இதனையிட்டு நாம் பெருமை கொள்ளலாம்.

போராட்ட மண்ணில் எப்படியான கஷ்டங்களுக்கு நடுவே வாழ்ந்திருக்கிறோம். எவ்வாறான மேடு பள்ளங்களையெல்லாம் கடந்திருக்கிறோம் என்பதை பல வருடங்கள் சென்ற பின்னும் மனதுள் மீட்டுப் பார்த்து பெருமையடையலாம்.

போரின் கடுமை கூடும் - குறையும். எனினும், நாம் போராட்ட சூழலில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

இக்கால கட்டத்தில் உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள தக்க நடவடிக்கைகளை எடுப்பது அவசியம்.

உளரீதியாகவும் எம்மைப் பலவீனப்படுத்த வேண்டுமென்பதே எதிரியின் எண்ணம். அதற்கு நாம் இடமளிக்கக் கூடாது.

சுற்றிச் சுற்றி இனியும் நாம் எங்கே ஓடுவது? என்ன நடந்தாலும் இந்த மண்ணில் தான் இருக்கப்போகிறோம். போராட்டம் நடந்து கொண்டிருக்கும் போது எமக்குரிய கடமைகள் என்னவென்பதை முதலிலேயே வரையறை செய்து அதில் தீவிரமாகப் புலனைச் செலுத்தி ஈடுபடுவதன் மூலம் மனதைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

குறிக்கோளுடன் கடமையில் இயங்கும் போது மனம் அச்சத்திலிருந்து விடுபடுகிறது.

இவ்வாறானதோர் இயங்கு நிலையில் எவ்வித பயமோ பீதியோ எம்மனதைப் பாதிக்காது. இது நம் உள்ளத்தைப் பாதுகாத்துக் கொள்ள உகந்த வழிமுறை.

எல்லோரையும் போல் மென்மையானவர்களாக வாழ்ந்த நாம் இன்று கடுமையான உழைப்பை கண்டு கொண்டுள்ளோம். எமது சக்தியின் அதியுயர் பலனை உணர்ந்து கொண்டுள்ளோம்.

போராட்டத்தினாலும், எதிரியின் தடைகளாலும் ஏற்பட்ட நல்லவிளைவுகளில் இதுவும் ஒன்று.

இந்த 'சாளரம்' உங்கள் கைகளுக்குக்கிட்டி இந்த நிலாமுற்றத்தைப் படித்துக் கொண்டிருக்கும் வேளையில் கூட சில சமயம் சமர் ஆரம்பித்திருக்கலாம்.

எதனையும் எதிர்கொண்டு வாழப்பழகிய நாம் இதற்கும் தயாராவோம்.

எங்கோ படித்த கவிதை வரிகள் ஞாபகத்திற்கு வருகின்றன.

*'காத்திருக்கும் வரை*
*காற்றாகவே இருப்போம்*
*புறப்பட்டால் புரியவைப்போம்*
*புயல் என்று'*

கவிதை

## துளிமுகத்துள் கங்கை

உலகம் இன்று வறுமையுற்றுள்ளது
அன்பில் வறிய வன்பாலை உலகுசெய்தோம்
-ன்பகத்தீர்
தயவு செய்து ஒருபிடி அன்பு செய்வீரா?

பானையில் இருந்தால் அகப்பையில் வரும்
உனது பாத்திரத்தின் உள்ளே
ஒட்டிக் கொண்டிருக்கும்
அன்பின் அவிழ்பதம் கண்டாயா?
ஆயின் நீ பாக்கியசாலி
அன்பில் வறிய அயலானுக்கு அதை வழங்கு
ஒருதுளி நேசிப்பில் தொடங்குகிறது
அன்பின் இதழவிழல

அன்பின் அவிழ்பதம் அளித்தாயா?
அதன் எதிர்வரவு காத்திராதே
வரவை எதிர் காத்திருப்பவன்
வாழ்க்கையை கடைவிரிப்பாக்குகிறான்
வாழ்க்கையோ
ஓர் தன்மலர்வின் வெளியகம்

தன் மலர்ந்த வாழ்வின் தடாகத்தெழுந்த
அமுத பாத்திரம்
மணிமேகலையின கையில் வந்தபோது
அள்ளி வழங்க வழங்கச் சுரந்து கொண்டேயிருந்தது
வற்றாத அன்பின் வாழ்வுடமையில்
இது ஒன்றும அதிசயமில்லை
ஆதலால்
அன்பின் ஊற்றுமுகத்தை திறந்துவை
மானுடனே
தனமலர்ந்த வாழ்வு உனதாகும்

துன்புறுவோரின் காற்தூசியையும் கழுவிவிடும்
அன்பின் ஊற்று
இன்பெருக்காய் எங்கும் அவிழ
அங்கழியும் தான், தனதென்ற சிறுவட்டம்
சிறுவட்டம் தாண்டி யெழுகின்ற பேரன்பு
ஆகாய கங்கையை பூமிக்கு இறக்கும்
தூயன்பின் துளிபோதும் தொடங்கு

சு. வில்வரத்தினம்

# ஒரு தலைமைப் பேருரை

(கத்தோலிக்க தமிழ்ப் பெரும்புலவர் வீரமாமுனிவருக்கு யாழ் நகரில் விழா எடுத்தவேளையில் 03.03. 1946 இல் நல்லூரர் சுவாமி ஞானப்பிரகாசர் நிகழ்த்திய பேருரை)

## புகழ் மணக்கும் புலவன்

நாம் வீரமாமுனிவரை நினைக்கும்போது சத்திய வேதத்தைப் போதிப்பதிலே தமிழ் மொழியை ஓர் உத்தம கருவியாக ஏவல் கொண்ட ஒரு போதகரின் திரு உருவம் எம் மனக்கண்முன்னே நிற்கின்றது.

தமிழைத் தமது உத்தம கருவியாக உபயோகித்ததினால் அந்தத் தமிழ் தன்னையும் ஒருவாறு திருத்தி வைத்த ஒரு மகாபுலவன் திருவுருவமாகவும் அது விளங்குகிறது.

வீரமாமுனிவர் பரமபதமடைந்து இரண்டு நூற்றாண்டுகளாயும் அவரது பூத உடல் அழிந்தும் புகழுடம்போ இன்றைக்கும் அழியவில்லை; தமிழ்மொழி உலகில் நிலவுந்தனையும் அழியக் கூடியதுமன்று.

வீரமாமுனிவரது புகழுடம்பு தமிழ்மயமானது. நம் ஆசியாவிலென்ன, ஐரோப்பாவிலென்ன, அமெரிக்கா முதலான தொலைவிலுள்ள நாடுகளிலென்ன திருத்தமான செந்தமிழ் அறிந்தவர்களெல்லோரும் செந்தமிழ் என்ற உடனே வீரமாமுனிவரின் நினைவும் ஓடிவரும்.

சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், நீலகேசி முதலிய பழைய காவியங்களை நினைக்கும்போது அந்நாட்களில் தமிழை வளர்த்த சமணரையும் பௌத்தரையும் நினைவில் கொள்ளாதிருப்பது எப்படி?

தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம் என்னும் பிற்கால நூல்களை நினைக்கும்போது பின் நாட்களில் தமிழை வளர்த்த வீரமாமுனிவரை மறந்து போக முடியுமோ?

## சமயமும், தமிழும்

இக்காலத்தில் எழுத்தாளர் சிலர் சைவத்தமிழ் என்றும் சைவமுந் தமிழும் தழைக்க என்றும் ஆங்காங்கு சொல்வதைக் கேட்கிறோம். தமிழைச் சைவத்தோடு இவ்வாறு ஒற்றுமைப்படுத்தப் போதிய நியாயமில்லை. எந்தச் சமயமாவது யாதொரு மொழியோடு ஒன்றிணைந்து விடுவதன்று. தமிழைச் சீர்ப்படுத்தியாராவது முற்காலத்தில் உழைத்தார்களெனில் சமணரையும் பௌத்தரையுமே எடுத்துச் சொல்லலாம். பஞ்சகாவியங்களும் அவர்களுடையனவே. பழைய இலக்கணங்கள், நிகண்டுகளெல்லாம் சமணர் செய்தவையே! எல்லா இலக்கணங்களுக்கும் மூலாதாரமான தொல்காப்பியத்தையும் பின்னர் நன்னூலையும் இயற்றியவர் மட்டுமல்ல, தமிழ்வேதம் என்று போற்றும் திருக்குறளை இயற்றியவர் சமணரே என்பது இப்போது சைவ அறிஞர்களும் ஏற்றுக்கொள்வதொன்று.

சென்றமாசம் வெளிவந்த "செந்தமிழ் வெளியீட்டில் இறாவ் பகதூர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் இவ்விஷயமாய் எழுதியதை உங்களிற் சிலர் பார்த்திருக்கலாம்.

சமணர் பௌத்தர்களுக்குப் பின்பு வைணவர்களும், சைவர்களும் அவர்கள் பின் தத்துவ போதகரும் அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றிய வீரமாமுனிவரும் பிற்காலத்தில் எவரும் செய்திராத அளவில் தமிழ்த் தொண்டு செய்திருக்கிறார்கள். தமிழ் அன்னைக்கு முற்காலத்தில் மேகலை சிலம்பு எனும் அணிகளைப் புனைந்தது போலப் பிற்காலத்தில் வீரமாமுனிவரன்றோ ஒரு தேம்பாத அணியை – அதாவது ஒரு வாடாத மலர் மாலையை – அணிந்தனர்.!

எனவே, சைவத் தமிழ், சமணத் தமிழ், பௌத்த தமிழ் என வழங்க நியாயங்கள் இருப்பின் கத்தோலிக்கத் தமிழ் என்று வழங்கவும் ஒருதடையுமில்லை.

கத்தோலிக்கர், பிறசமயத்தவர்களிலும் பார்க்க அதிகமாயில்லாவிட்டாலும் அவர்கள் அளவாயாவது தமிழை வளர்த்திருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. இப்படியிருக்கும்போது இன்றைய கத்தோலிக்கராகிய நாம் ஏன் பின்நிற்க வேண்டும்? தமிழ்த்தேர்ச்சியின் முன்னணியிலே நம்முடைய வீரமாமுனிவர் நிற்க, கத்தோலிக்கராகிய நாம் நமக்கு அதில் அக்கறையில்லையென்று ஒதுங்கலாமா?

## நமது பணி

நமக்குள் கல்வி கேள்வியுள்ள ஒவ்வொருவரும் தமிழ்த்தேர்ச்சியில் கைவிட வேண்டும். தமிழ்த்தேர்ச்சி என்பது என்ன? தமிழ்மொழியில் ஏலவே உள்ள நூல்களைக்கற்று, இல்லாத விடயங்களையிட்டு நூல்கள் எழுதவேண்டும். நமது மொழியில் புதுப்பொருட்களை

வெளியிட வெளியிட அந்தமொழி புதுக்கருத்துள்ள சொற்களைப் பெற்றுக்கொண்டு விரிந்து விரிந்துவரும். இதுதான் தமிழ்த்தேர்ச்சி; தமிழ்மொழியின் வளர்ச்சி.

புதுப் புதுப் பொருட்கள் வந்தடையாமல் பாஷை வளர்வதில்லை. புதுப்பொருட்கள் இல்லாதவரையில் எந்தமொழியும் பழையபடியே வரையறையுள்ள தொகையான சொற்களோடு நிற்கும். வளருகின்ற பாஷையில் முழுதும் புதிதான சொற்கள் உண்டாக்கப்படுமென நான் சொல்லவில்லை. சொற்கள் மிகவும் பழமை பொருந்தியவை. அவைகள் வளருவது எப்படியெனில் பழைய சொற்களுக்குப் புதிய கருத்துக்கள் பொருத்துவது ஒன்று; புதிய தொடர்கள் புதிய கருத்துக்களைத் தாங்குவது வேறொன்று.

இவ்வாறே சமணர் காலத்தில், பௌத்தர் காலத்தில் சைவ - வைஷ்ணவ காலத்தில் பிற்காலத்தில் தத்துவ போதகர் வீரமாமுனிவர் காலத்தில் புதுப்புதுக் கருத்துக்களுக்கும் கருத்துக்கள் கொண்ட தொடர்களும்வழக்கில் வந்து தமிழை வளம் பெறச் செய்தன.

இவற்றைத் தழுவியே எவ்வெச் சாதாரண எழுத்துக்களாலும் நமது இனியமொழி இன்றைக்கும் திருத்தமும் பொலிவும் பெற்றுவருகின்றது.

தமிழ்த்தேர்ச்சிக்கு வீரமாமுனிவரும் வித்தாக விளங்கினார். அவரது மகத்தான வேலைக்கு உரிமையாளராகிய யாம் இன்றைக்குத் தமிழைப் பண்படுத்துவோரது முன்னணியில் நில்லாமல் போகலாமா? ஒவ்வொரு மொழியும் உண்மையை வெளியிடுவதற்கே சிறந்த கருவியாக வேண்டியது.

சிருட்டிகரைப் பற்றிய வேதசாத்திரத்துக்கோ, இயற்கையைப்பற்றிய உண்மை அறிவாகிய விஞ்ஞானத்துக்கோ தேசசரித்திரம் சனசாத்திரமாகிய உண்மை இதிகாச வரலாற்றுக்கோ கத்தோலிக்கராகிய நாமே குன்றாத பாக்கியமுடையவர்கள்.

நமக்குத் திருச்சபை மூலமாய்ப் பிதிரார்ச்சிதமாய் கிடைத்திருக்கின்ற இந்த உண்மையானது தமிழிற் சுவறி அதன் மூலமாய்த் தமிழ்மக்கள் எல்லோருக்கும் அதைப் பரவச் செய்வது எம் கடனன்றோ?

வீரமாமுனிவரைத் தமிழ்மயத் திருவுருவாய்க் கொண்டிருக்கும் கத்தோலிக்கராகிய நாமும் அவரவர்க்கு இயன்ற அளவில் தமிழை வளர்த்து, தமிழ் வளர்ச்சிக்குத் துணைசெய்வதற்கேற்ற சில வழிகளை ஆராயும் பொருட்டு இன்று இந்த மகாசபை கூடியிருக்கிறது.

## நாணயங்கள் – சில தகவல்கள்

அச்சில் வார்க்கப்பட்ட உலோக நாணயங்களுக்கு முன், மனிதன் பலவிதப் பொருட்களை நாணயங்களாகப் பயன்படுத்தினான்.

இலங்கைத் தீவில் ஆதிகாலத்தில் யானைத் தந்தங்களில் செதுக்கப்பட்ட சட்டங்கள், அபூர்வமான பறவைச் சிறகுகள் போன்றவை எல்லாம் நாணயங்களாகப் பயன் படுத்தப்பட்டுள்ளன.

நூறு ஆண்டுகளுக்கு முன்பு கூட போர்னியோவில், மனித வேட்டையாடும் ஆதிவாசிகள், மனிதர்களின் மண்டை ஓடுகளை நாணயங்களாகக் கொடுத்துப் பொருள்களை வாங்கிக் கொண்டார்கள்.

பசுவிக் தீவுகளில் ஆதிவாசிகள் 2மீ. உயரம் உள்ள கல்லால் ஆன நாணயங்களைப் பயன் படுத்தினார்கள். உலகில் இதுதான் மிகப் பெரிய நாணயம்.

உலகில் முதல் உலோக நாணயங்கள் சீனாவில் பயன்படுத்தப்பட்டிருக்கும் என்று நம்பப்படுகிறது. சீனா கி. மு. 1000 - இல் முதல் நாணயங்களை வெளியிட்டது. தங்கம், வெள்ளி, செப்புக் காசுகள் அவை.

அடுத்து, உலோக நாணயங்களை வெளியிட்ட நாடு கிரேக்கம். இவற்றில் சிங்கம், எருது, குதிரை, கப்பல், கழுகு, ஆந்தை, அரசர்தலை, முதலிய உருவங்கள் பொறிக்கப்பட்டன.

பல மதிப்புகளில் பல நிறங்களில் கண்ணாடியாலான நாணயங்கள் கி. பி. 908 முதல் கி. பி. 1171 வரை எகிப்தில் பழக்கத்தில் இருந்தன.

நாணயங்களில் முதன் முதலாகத் தன் தலையைப் பொறித்த மன்னன் மகா அலெக்ஸாண்டர்.

இந்தியாவில் ஷெர்ஷா மன்னர்தான் (கி. பி. 1533 — 1545) ருபியா என்ற பெயரில் வெள்ளி நாணயங்களை வெளியிட்டார். வட மொழியில் ''ருபயம்'' என்றால் வெள்ளி என்று பொருள். அதிலிருந்துதான் 'ரூபாய் என்றசொல் வந்தது.

ஆங்கிலேயர்கள் 'ருபியா' என்ற சொல்லை 'ரூபாய்' என்று மாற்றி 1 ரூபாய், ½ ரூபாய், ¼ ரூபாய் நாணயங்களை வெள்ளியில் வெளியிட்டார்கள்.

# வவுனியா மாவட்டத்தின் இன்றைய கல்வி நிலை

உமாபதி

அன்று தொட்டு இன்று வரை தமிழ் மக்கள் கல்விக்கு பெரும் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றார்கள். இராணுவப் படையெடுப்பு, ஊரடங்குச் சட்டம், மக்கள் இடம் பெயர்வு போன்ற காரணங்களால் தற்காலத்தில் மாணவர்களின் கல்வி மிகவும் பாதிப்படைந்து வருகின்றது. வடமாகாணத்திலுள்ள மாவட்டங்களில் யாழ்ப்பாணத்தில் அநேக பாடசாலைகள் காணப்படுவதால் மக்கள் ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்கு இடம் பெயர்ந்தாலும் தமது கல்வியைத் தொடரக் கூடியதாக உள்ளது. மற்றைய மாவட்டங்களான மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களில் இடம் பெயர்ந்த மாணவர்கள் கல்வியைக் தொடர்வதில் பல சிரமங்கள் ஏற்படுகின்றன.

வவுனியா மாவட்டத்தில் பாடசாலைகள் ஒவ்வொரு கிராமத்திலும் அமைந்திருந்தாலும் அவை ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 5 வரை உள்ள ஆரம்பப் பாடசாலைகளாகவே உள்ளன. சில குறிப்பிட்ட இடங்களிலேயே ஆண்டு 6க்கு மேல் கல்வி கற்கக் கூடிய வசதி நிலவுகின்றது. இவை தூரத்திற்கு ஒன்றாகவே இருக்கின்றது. அதாவது பல கிராமங்களுக்குப் பொதுவாக ஒரு பாடசாலை உள்ளது. ஒரு மாணவன் ஆண்டு 6 கற்க வேண்டுமாயின் சில வேளைகளில் 8 கி.மீ.களுக்கு கூடச் செல்ல வேண்டிய நிலை இருந்து வருகின்றது. உதாரணமாக கல்மடுக் கிராமத்திலுள்ள ஒரு மாணவன் ஆண்டு 8 படிப்பதாயின் புதுக்குளம் மகாவித்தியாலயத்திற்கோ அல்லது பூவரசங்குளம் மகாவித்தியாலயத்திற்கோ செல்லவேண்டிய நிலை உள்ளது. இதே போல் பம்பைமடு மாணவன் ஆண்டு 6 கற்கவேண்டுமாயின் அதிலிருந்து ஏறத்தாழ 8 கி.மீ தூரத்திலுள்ள நெளுக்குளத்திற்கோ அல்லது பூவரசங்குளம் ம. வித்தியாலயத்திற்கோ செல்லவேண்டும். இவ்வாறே தான் வவுனியா மாவட்டத்திலுள்ள ஏனைய இடங்களும் விளங்குகின்றன. போக்குவரத்து வசதிகள் அற்ற கிராமங்கள் அனேகம். அங்கு அன்றாட வாழ்விற்கே கஷ்டப்படும் மக்கள், ஒரு சைக்கிள் வாங்குவதற்கும் கூட அவர்கள் மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளது. இதன் காரணமாக மாணவர்கள் பலர் தங்கள் கல்வியை ஆரம்பக் கல்வியுடன் நிறுத்திக் கொள்ளுகின்றார்கள். இந்நிலையே பொதுவாக வவுனியா மாவட்டத்தில் காணப்பட்ட போதிலும் படிப்படியாக கல்வியில் நாட்டம் கூடிக் கொண்டே வந்துள்ளது.

முன்பு மேல் வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும் தற்போது அவ்வகுப்புக்களில் கூடுதலான மாணவர்கள் வரத் தொடங்கினர். இக் காலகட்டத்தில் ஆசிரியர்கள் பற்றாக் குறையும் வவுனியா மாவட்டத்தில் இருந்து தற்போது தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கையால் குறைந்துள்ளது. ஓரளவு கல்வித் துறையில் முன்னேறிவரும் வேளையில் 1990 ஆனிமாதமளவில் தொடங்கிய பேரினவாத யுத்தத்தால் எல்லாம் தவிடு பொடியாயின. நெளுக்குளம் மகாவித்தியாலயம் புதுக்குளம் மகாவித்தியாலயம், பூவரசங்குளம் மகாவித்தியாலயம், செட்டிகுளம் மகாவித்தியாலயம், பாவற்குளம் மகாவித்தியாலயம் போன்ற பல மேல் வகுப்புக்கள் உள்ள பாடசாலைகள் இயங்க முடியாத நிலைக்கு உட்பட்டன. பல கிராம மக்கள், தங்கள் சொந்த இடங்களை விட்டு தூர உள்ள சிறு கிராமங்களுக்கு இடம் பெயர்ந்தனர். அவர்கள் சென்ற கிராமங்களில் ஆரம்பப் பாடசாலைகளே கூடுதலாகக் காணப்படுகின்றன. அதனால் ஆண்டு 6க்கு மேலுள்ள மாணவர்கள் தங்கள் பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதனால் மேல் வகுப்புக்களில் படிக்கமுடியாமலும் தாங்கள் படித்த வகுப்புக்களில் கற்ற கல்வியைக் கூட மறந்து விடக் கூடிய நிலைமையை அடைந்துள்ளனர்.

அடுத்து வவுனியா மாவட்டத்தில் அனேகர் கிராமப்புற மக்களாக இருப்பதால் தங்கள் பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வியைக் கூட வீட்டில் சொல்லிக் கொடுக்க முடியாதவர்களாக இருக்கின்றார்கள். பிள்ளைக்கு பாடசாலையில் அன்று நடைபெற்ற பாடங்களிலுள்ள சந்தேகங்களையோ அல்லது விளங்காத பகுதியையோ கேற்பதற்கு ஒருவரும் இருக்க மாட்டார்கள். வவுனியா நகர்ப்புற மாணவன் தனது மாலை வேளையை ரீயூசன் வகுப்புக்களில் கழிக்கும் போது கிராமப்புற மாணவன் தனது பெற்றோருக்கு உதவுவதிலோ அல்லது விளையாட்டிலோ தான் கழிக்கின்றான் இரவு வேளைகளிலும் உடல் உழைப்பின் களைப்பினால் விரைவில் படுக்கைக்குப் போகும் பெற்றோர்கள் இருப்பதால் அவர்களின் படிப்பு சில மணி நேரத்திற்கே நடைபெறுகின்றது. இம் மாணவர்கள் படிப்பதற்கென்று தனியான ஒரு இடமோ, மேசை நாற்காலியோ இருக்காது. நிலத்திலிருந்து சூழவர பெற்றோர் சகோதர்கள் இருக்கும் நிலையிலேயே படிக்க வேண்டியுள்ளது. சமயம், தமிழ் போன்ற வாசிப்புப் பாடங்களைச் சிறப்பாகச் செய்ய முயன்றாலும் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களைக் கற்பதில் மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளது. வீட்டில் விளங்கப் படுத்தக் கூடியவர்கள் இல்லாத படியாலும் பாடசாலையில்

(24-ம் பக்கம் பார்க்க)

கதவு 2 காற்றலை 2

# 1991 ஐ மதிப்பீடு செய்வோம்

தமிழீழத்தில் நடைபெறும் போர்தான் இன்று தமிழீழத்தின் அனைத்து சமூகப் பிரச்சினைகளும் மையங்கொள்ளும் செயலாகவுள்ளது. சமூகத்தின் அனைத்துப் பிரச்சினைகளும் போருடன் தொடர்பு பட்டுள்ளதுடன் போரே இவற்றின் கேந்திரமாக விளங்குகின்றது. ஆகவே போரைப்பற்றிய மதிப்பீடுதான் 1991 ஐப் பற்றிய சமூக மதிப்பீடாகவும் இருக்கும்.

1991 ல் தென் தமிழீழத்தில் கெரில்லா போர்முறை எங்கும் பரந்து காணப்படும் ஒரு தொடர் நிகழ்வாக இருந்தது. சிறிலங்கா இராணுவம் சுதந்திரமாக நடமாட முடியாத நிலையே நிலவியது. சிவில் நிர்வாகமும் தங்கு தடையின்றி நடைபெற இயலவில்லை. பாரிய இழப்புகளின் மத்தியிலும் மக்கள் சரணடையாது உறுதியாய் நின்றுள்ளார்கள். கொரில்லா போர் உத்திகளால் எதிரி அடிக்கடி கொதிப்படைந்து தன்நிலை இழந்து செயற்பட்டுள்ளான்.

வட தமிழீழத்தைப் பொறுத்தவரை இங்கு மாபுவழி போர் முறையே (கிரமமான போர் முறை) தீர்க்கமான போர் வடிவமாக இருந்துள்ளது. எல்லையோரங்களில் படையைக் குவித்து உள் நுழைய முற்படுவதே எதிரியின் இராணுவ முயற்சியாக இருந்துள்ளது. இதற்காக முப்படையும் பயன்படுத்தப்பட்டது. ஆனாலும் இந்த முயற்சியில் மிக மந்தமான முன்னேற்றத்தையே அவன் கண்டான்.


இலங்கைத் தீவு முழுவதும் தனது நாடு என்று சொல்லிக் கொள்ளும் சிறிலங்கா அரசு, ஒரு அந்நிய நாடு இராணுவ ஆக்கிரமிப்புச் செய்வதற்காக எவ்விதம் நடந்து கொள்ளுமோ அவ்விதமே சிறிலங்கா இராணுவம் நடந்துள்ளது. அதிலும் யாழ் குடாநாட்டை முற்றுகை இடுவதற்கு அவனுக்கு ஒரு வருடத்திற்கு மேல் சென்றுள்ளது.

வட-தமிழீழம் தனது ஆழுகையின் கீழ்பெருமளவு பிரதேசத்தை வைத்திருக்கக்கூடிய தகமையை பெற்றுள்ளது தமிழீழத்தின் பிரதான வெற்றியாகும். இவ் வெற்றிக்கான காரணம் தமிழீழ தேசிய அரசின் ஆரம்ப வடிவம் உருவாக்கப்பட்டு விட்டதேயாகும். தமிழீழ தேசிய இராணுவமே அதன் அச்சாணியாகும். இந்த இராணுவத்தை அச்சாணியாகக் கொண்டு ஒரு அரசிற்குரிய ஏனைய அங்கங்கள் தமது ஆரம்பநிலையில் தோற்றுவிக்கப்பட்டு விட்டன. சட்ட ஒழுங்கு நிர்வாகத்தின் அச்சாணியான காவல் துறை. நீதிபரிபாலன துறையில் ஆரம்பநிலை அங்கமான இணக்க மன்றங்கள், சிவில் நிர்வாகத்தின் ஆரம்பநிலைப் பரிபாலன அங்கமான நிழல் நிர்வாகம் ஆகியனவே அவையாகும். ஆகவே 1991 ம் ஆண்டை தமிழீழத்தின் முதன்நிலை அரசு தோற்றம் பெற்ற ஆண்டாக கொண்டால் அது தவறாகமாட்டாது. இந்த அர்த்தத்தில் 1991 ம் ஆண்டு தமிழீழ வரலாற்று முக்கியத்துவம் மிக்கதோர் ஆண்டாகும் என்றால் அது மிகையாகாது.

சுருக்கமாய் சொன்னால் தென் தமிழீழத்தில் தோற்கடிக்கப்பட முடியாத கொரில்லா போர்முறை தொடர, வட-தமிழீழத்தில் தனக்கென்று தன்னாட்சி எல்லைகளைக் கொண்டதொரு முதல்நிலை தமிழீழ தேசிய அரசுடன் தமிழீழம் 1992 ம் ஆண்டிற்குள் பிரவேசிக்கிறது.

1992 ம் ஆண்டு பாரிய பின்னடைவுகள் எதுவும் அற்றதொரு ஆண்டாக திகழ தமிழீழத்திற்கு எமது வாழ்த்துக்கள். தமிழீழ மக்கள் மேலும் பல புதிய வெற்றிகளைப் பெற வாழ்த்துகிறோம்.

## குறள் வெள்ளம்



### பொய் பேசு

சில சந்தர்ப்பங்களில் உண்மை ஆபத்தில் முடிந்து விடுகிறது. யாருக்கும் கேடு வராத வகையில் ஒரு பொய் கூறி ஒரு நன்மையை உருவாக்க முடியுமானால் அங்கே அதனையும் வரவேற்கலாம்.

எம்மிடம் அடைக்கலம் தேடிவந்த ஒருவனைக் கொல்ல, ஆத்திரத்தில் கத்தியுடன் ஓடி வருகிறான் மற்றவன். இவ்விடத்தில் பொய் தானே கூற வேண்டும். இல்லாவிட்டால் இரண்டு பகுதிக்குமே ஆபத்து வரலாம்.

நோயால் அவதிப்படுபவனிடம் அதுபற்றிய முழு உண்மைகளையும் வைத்தியர் சொல்வதில்லை. ஏதோ கூறிச் சமாளிப்பதாலே அவன் நிம்மதியாக இருக்கிறான்.

"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்"

-0292
(வாய்மை)

அம்பிகைபாகன்

# மன நிலையும் செயன் முறையும்

உயர்திரு. விபுலானந்தர்

மனக் கருத்தின் வழியேதான் சொற் செயல்கள் இயற்கையாக நிகழ்கின்றன. சில போது அவை வேறுபட்டிருக்கலாமாயினும், நெடுங்காலம் அவ்வாறிருக்க முடியாமல், மனதின் வழியே திரும்பி விடுகின்றன. எத்தனை நாளைக்குத்தான் மனதோடு பொருந்தாத வாழ்வு நடத்தலாம்? மனதோடு மாறுபட்டுச் செய்ய கருமங்கள் முடிவதில்லை. முடிந்தனவாயின் அவை எவ்வாறோ மனத்தோடு இயைந்தனவாகவே இருக்க வேண்டும். சரியான நோக்கம் பிறருக்குப் புலப்படாமல் இருக்கலாம். ஒருவன் மனதைக் காண்பதற்கு அவன் சொற்செயல்கள் கருவியாய் இருக்கின்றன. மனம் என்னும் எந்திரத்தின் வேலையே வாழ்க்கையாகும். சிறிய உயிர்கள் முதல் மகாத்துமாக்கள் வரை செய்யும் வேலையெல்லாம் மனத்தின் ஊக்கத்தால் உண்டாகி அதன் தேவைக்குத் திருத்தி(திருப்தி) செய்வதேதான். மனத்தோடு பொருந்தாத வாழ்க்கையுடையான் அமைதியிழந்து நிற்கிறான். அதன் பயனாக அவன் பின்னால் மனதோடு இயைந்து வாழ மிக மூர்க்கமாக வேலை செய்கிறான். பவனத்தை நாம் தள்ளும்போது அது மிக உரைத்து எதிர்க்கிறது; மனமும் அடக்கப்படுந்தோறும் ஆண்மை கொண்டெழுகிறது. எங்கே அடக்குமுறை அதிகமாக கையாளப்படுகிறதோ, அங்கே நிச்சயம் சட்ட மறுப்பு நிகழ்கிறது. நியாயத்தினாலோ, இதத்தினாலோ மற்றவனின் மற்றவனுடைய மனத்தைத் திருப்ப முயல்வதன்றி நமக்குக் கிடைத்த அதிகார பலத்தினால், மற்றவர்களை அடக்கப் பார்ப்பது வீண் வேலையாவதுமல்லாமல், நமக்கே தீங்காகவும் முடியும்; விரோதமும் வளரும். அதிகார பலத்தாலோ நயவஞ்சகத்தாலோ இப்போதைக்கு வெற்றி கிடைத்தது போல் தோன்றினாலும், அவ்வெற்றி அழிவுக்குக் காரணமாகும். நம்முடைய மனோநிலையை நாம் மறைக்கப் பார்ப்பதும் வீணே. அன்பு குரோதம் முதலிய குணங்கள் எப்படியோ உரிய இடத்தில் சென்று தாக்கிப் பயன் விளைவித்து வெளிப்பட்டு விடுகின்றன. நாம் எவ்வளவு தூரம் ஆசைப்பட்டாலும், பாதுகாத்தாலும், நம் குற்றங்கள் ஒரு நாளில் வெளிப்பட்டே தீரும். இல்லையானால், நாம் ஓர் இடத்திலே செய்த குற்றம், மற்றோரிடத்திலே வந்து அடாப்பழியாக நமது தலையிலே முடியும். குற்றமில்லாமலிருந்தும் நாம் பழிபெறலாம். அங்கேயும் உரிய இடத்திலே உண்மை புலனாவது நிச்சயம். குற்றத்தைச் செய்து விட்டு உலகத்திலிருந்தோ கடவுளிடத்திலிருந்தோ தப்பலாம் என்ற எண்ணத்தை விட்டு விட வேண்டும். ❁

''குறைகளில் எல்லாம் பெரியகுறை ஒரு குறையும் இல்லை என எண்ணிக் கொள்வதே. பாவங்களில் எல்லாம் பெரிய பாவம் ஒரு பாவமும் செய்யவில்லை என்று எண்ணிக்கொள்வதே''

— கார்லைல் —

## வவுனியா மாவட்டத்தில்...

(22-ம் பக்கத் தொடர்)

கற்பதை அன்றே திரும்பக் கற்க முடியாது போவதாலும் அப்பாடங்களில் முன்னேற்றம் மிக மந்தமாகவேஉள்ளது. அத்துடன் இப்பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக் குறையும் இன்றும் நிலவுகின்றது.

இம் மாவட்ட மாணவர்கள் முன்னேற்றம்காண வேண்டுமாயின் அங்குள்ள ஆசிரியர்கள் மிகவும் ஒத்துழைக்க வேண்டிய நிலையுள்ளது. ஆயினும் இன்று வவுனியா கிராமப் புறங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களே தங்கள் நலன் கருதியும், மேல்படிப்பு வசதி கருதியும் நகர்ப்புறப் பாடசாலைகளில் கடமையாற்றவே விரும்பும் நிலை காணப்படுகின்றது. தங்கள் கிராமப்புறப் பகுதிகளை முன்னேற்ற வேண்டும் என்ற சேவை மனப்பான்மை மிக மிகப் குறைவாகக் காணப்படுகின்றது. என்பதும் குறிப்பிடத் தக்கது. இந்நிலை மாறி ஆசிரியர்கள் மாலை நேர வகுப்புக்களை நடாத்தி மாணவர்கள் மீது பிரத்தியேக கவனத்துடன் சில வருடங்கள் வழிநடத்திச் சிறந்த பெறுபேறுகளைப் பெற உதவினால். அடுத்து வருமதலை முறையினரை இம் மாணவர்கள் பொறுப்பேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இதோ அறிமுகப்படுத்துகிறோம்

# பெப்சி திடீர் ரசம்

**ஒரு நொடிப்பொழுதில்**
**ரசம் தயார்!**

நீங்கள் வீட்டிலிருந்தபடியே
தயாரிக்கக்கூடிய சக்திமிக்க பானம்

## பெப்சி திடீர் ரசப்பொடி

*தயாரித்து விநியோகிப்போர்*

ஜோ. எக்கட்டன்
செனித் மார்க்கட்டிங் அன்ட்
அட்வடைசிங் சிஸ்டம்ஸ்

19/3 கொழும்புத்துறை சாலை,
சுண்டுக்குளி.

உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு தாரீர்

மனைக்குவெளியே ஒரு மனை!
ஆம் உங்கள் இல்லத்தில் இருந்தபடியே
உணவு உண்ணும் நிலை.

வாருங்கள்

**ஜோ. எக்கட்டனின்**
**ஜெசித்தாரா உணவகத்திற்கு**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி எதிர் ஒழுங்கை
19/3, கொழும்புத்துறை சாலை,
சுண்டுக்குளி.

சுத்தம், சுகாதாரம், சுவை
இவை மூன்றிற்கும் முதலிடம்

வந்துபாருங்களேன் மிச்சசொச்சத்தை ...

## ஜோ. எக்கட்டனின்

ஜெசித்தாரா உள்ளூர் உணவகம்
சுண்டுக்குளி.

உங்கள் எழிலான தோற்றத்திற்கு
மேலும் எழில் சேர்க்கும்

## எழில் தையலகம்

*உங்களுக்குத் தேவையான*
*சிறுவர், சிறுமியர் ஆடைகளுக்கு*

**எழில் தையலகம்**

*வாருங்கள் மாறுங்கள் எழில் ஆடைகளுக்கு*

# எழில்

19/3, கொழும்புத்துறைசாலை,
சுண்டுக்குளி.

(சுண்டுக்குளி மகளிர்கல்லூரி எதிர் ஒழுங்கை)

சுண்டுக்குளி மக்களின் நலன்கருதி
ஆரம்பமாகி உள்ளது.

## நியாய விலைச் சந்தை

சுண்டுக்குளி.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி எதிர்
ஒழுங்கையில் நடைபெறுகிறது.

*உங்கள் அன்றாட மனைத்தேவைகளை*
*பூர்த்தி செய்துகொள்ள நாடுங்கள்*

சுண்டுக்குளி நியாயவிலைச் சந்தை

19/3 கொழும்புத்துறை சாலை
சுண்டுக்குளி.

# ஓவியம் வாக்கியம்



உலகையே பெண் சுமக்கிறாளா?
அல்லது, உலகம் தன் சுமையை
பெண்மீது அழுத்துகிறதா?

பொருத்தமான வரிகளை எழுதி
அனுப்புங்கள்